**SS DIGITAL'S**
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில், விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சிடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங், கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே
எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224933, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.

புரட்டாதி மாதம் 7ம் திகதி

September 23, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 09

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

உள்ளே...

கோட்டியாரம் வரலாற்று அறிமுகம் பக்கம் 3ல்

எல்லைக்கல் பக்கம் 4ல்

கட்டுரை – நந்தினி சேவியர் பக்கம் 4ல்

அரங்கு பக்கம் 5ல்

சாம்பல் தீவு பொது நூலகம் வரலாற்று நோக்கு பக்கம் 5ல்

அரசியல் கட்டுரை பக்கம் 6ல்

விளையாட்டு செய்திகள் பக்கம் 7ல்

# திருமலையில் உருவாகின்றதா புதிய தமிழ் கட்சி ?



புதிய தமிழ்க் கட்சியொன்று திருக்கோணமலையில் உருவாகுவதற்கான அடிப்படை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக உறுதியாகத் தெரியவந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் சிலர் இணைந்தே இந் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதாகவும் அவர்களிற்குப் புலம்பெயர் மக்களிற் சிலர் ஆதரவளித்து வருவதாகவும் வெளியாகியுள்ள தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிக்கும் காலப்பகுதியில் தம்மை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்து தமிழ்த் தலைமைகளால் புறக்கணிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் இந் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் பேரினவாதக் கட்சிகளுடன் பலமான தொடர்புகளைக் கொண்ட இவர்கள் பொருளாதார வசதியுடைய புலம் பெயர் மக்களின் பின் புலத்துடன் இக்கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியுடன் செயற்படுவது தெரிய வந்துள்ளது

10ம் பக்கம் பார்க்க

## திருமலை வைத்தியசாலையில் கட்டில் தட்டுப்பாட்டை நீக்க லயன்ஸ் கழகம் உதவி.

திருக்கோணமலை தள வைத்தியசாலையில் நிலவும் நோயாளிகளுக்கான கட்டில் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக திருமலை லயன்ஸ் கழகத்தினர் திருக்கோணமலை நகர மற்றும் உவர்மலை லியோ கழகத்தினருடன் இணைந்து அரசினால் புதிதாக வழங்கப்பட்ட ஆனால் பொருத்தமுடியாதிருந்த கட்டில்களின் ஒரு தொகுதியினை 15.09.2012 அன்று பொருத்திக் கொடுத்தனர். அரசினால் வழங்கப்பட்ட பெருமளவு புதிய கட்டில்கள் பொருத்த முடியாது வைத்திய சாலைக்கட்டிடத் தொகுதியினுள் முடங்கிக் கிடப்பதாகவும் அவற்றுள் சுமார் 20 கட்டில்கள்

10ம் பக்கம் பார்க்க

## விருது வென்ற மூன்று குறு நாடகங்கள் திருமலையில் மேடையேற்றம்

2011ம் ஆண்டு இளைஞர் விருது பெற்ற மூன்று குறுநாடகங்கள் கடந்த 19.09.2012 அன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் தி/ பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விலே செல்வராஜா லீலாவதி

10ம் பக்கம் பார்க்க

திருமலையில் முதன் முறையாக
DHL
உங்கள், வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் நண்பர்களுக்கு விரைவாகவும் (ஐந்தே நாட்களுக்குள்) பாதுகாப்பாகவும் பொதிகளை (Parcel) அனுப்ப உங்களின் சிறந்த தெரிவு DHL முறையே!

தற்போது DHL மூலமாக
* உணவுப் பொருட்கள்
* உடைகள்
* பரிசுப் பொருட்கள்
* வாழ்த்து மடல்கள் மற்றும்
* முக்கிய ஆவணங்களை அனுப்பமுடியும்.
இதற்கு நீங்கள் நாடவேண்டியது.
SS DIGITAL'S
58, Vidyalayam Road, Trincomalee.
Hot Line: 026 2224933 / 0773663103
(சண்முக வித்தியாலயத்திற்கு முன்பாக)
DHL

## கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் மீண்டும் ஹொக்கி அணி



தி/ இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் ஹொக்கி விளையாட்டை மீண்டும் தொடங்குவதற்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் உபகரணங்களை வழங்கியுள்ளது.

1960ம் ஆண்டுவரை இப்பாடசாலையில் ஹொக்கி விளையாடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. அதன் பின்னர் சுமார் ஐம்பது ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் இக் கல்லூரிக்கு ஹொக்கி விளையாட்டு பகரணங்கள் வழங்கப்பட்டமையானது ஓர் வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சமாகும்.

19.09.2012. புதன்கிழமை மாலை கல்லூரி அதிபர் இ.புவனேந்திரனிடம்

10ம் பக்கம் பார்க்க

## வரட்சி நிவாரணமாய் வருகின்றது – காசுக்கான வேலைத்திட்டம்

திருமலை மாவட்டத்தில் வரட்சியால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் தமது வாழ்வாதார தொழில்களையே இழந்துள்ள இவர்களுக்கு உணவுப் பொருட்களும், பணமும் வழங்குவதற்கான 'காசுக்கான வேலைத்திட்டம்' நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. காசுக்கான வேலைத்திட்டம் என்பது நிவாரண உதவிகளை வெறுமனே வழங்காது அதற்குப் பிரதியுபகாரமாக குறித்த மக்கள் வாழும் பிரதேசங்களில் சிறிய

10ம் பக்கம் பார்க்க

## அடிப்படை வசதிகலற்ற சலப்பையாற்றுக் கிராமம்

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட சலப்பையாறு பிரதேச மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி துன்பப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. சிலாபம் பகுதியைச் சேர்ந்த இம் மக்கள் தொழிலின் நிமித்தம் சலப்பையாற்றுப் பகுதிக்கு வந்தேறியவர்கள் ஆவர். 28

10ம் பக்கம் பார்க்க

## புறநெகும திட்டமிடல் கூட்டம்

2013ம் ஆண்டு தொடக்கம் 2016 ம் ஆண்டுக் காலப்பகுதிக்கான புறநெகும திட்டமிடல் கூட்டம் பெரிய பாலம் அல்-மினா பாடசாலையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மூதூர் பிரதேச சபைக்குற்பட்ட 42 கிராம உத்தியோகத்தர்

10ம் பக்கம் பார்க்க

## மூதூரில் நடந்தது இரத்ததான முகாம்

கடந்த ஞாயிற்றுக் கிழமை மூதூர் வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. வைத்திய சாலை அத்தியட்சகர் வைத்தியர் வி.பிரேம் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள், இராணுவத்தினர் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

10ம் பக்கம் பார்க்க

## வறட்சியின் மிகுதியால் வற்றிய குளம்

கடந்த சில நாட்களுக்கு முன் திருக்கோணமலையில் நிலவிய கடும் வெப்பமான காலநிலையால் மனையாவெளிப் பிரதேசத்திலுள்ள குளம் வற்றிப் போய்க்கிடக் கின்றது. இக்குளம் கடற்படை முகாமின் கம்பி வேலிகளை ஒரு பக்க

10ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்!

இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கிழக்கின் மாகாண சபையில் ஆட்சியமைக்க முடியாமல் போய்விட்டது. இறுதிவரை நம்பியிருந்த தமிழ்த் தலைமைகளை ஓரந்தள்ளிவிட்டு ஏனைய கட்சிகள் அரசுடன் இணைந்து ஆட்சியமைத்து விட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளுமே அரசுடன் இணையத் தயாராயிருந்தமையை நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும். எனில் தமிழர்களாகிய நாம் தனித்த ஓர் இனம் என்பதையும், அவ்வினம் தனது சுயநிர்ணய உரிமைக்காகக் எப்போதுமே ஓர் குரலைக் கொண்டிருக்கும் என்பதையும் ஓர் பயக்கண் கொண்டு பார்ப்பதுமே ஏனைய எவரும் எம்முடன் இணைவதை தவிர்ப்பதற்கான காரணிகளாகும். மேலும் தம்முடைய தனிப்பட்ட அபிலாசைகளை நிவர்த்தி செய்ய அரசுடன் இணைவதே பெறுமதியானது எனும் முடிவினைப் பாமரனும் எடுத்துவிடும் நிலையில் படித்த, பழுத்தழுகிய அரசியல் தலைமைகள் விரைவாகவே எடுத்து விடுகின்றன. நீண்டகாலத்திற்கு இவ்வகை முடிவுகள் வலுச்சேர்க்கப் போவதில்லை எனும் வாதம் எமக்கிருந்தாலும் நீண்டகாலம் என்பது நிச்சயமற்றது எனும் விடயத்தையும் நாம் மறக்காதிருப்போமே!

பல்கழைக்கழகங்கள் திறக்கப்பட்டதான செய்தியொன்று எம்முன் வந்த போது நாம் கொஞ்சம் ஆசுவாசப் பட்டுக்கொண்டோம். ஆனால் திறந்த பல்கழைக்கழகங்களுக்குள் தமது சம்பளப் பிரச்சனைகளைத் தீர்க்கும்வரை நுழையப் போவதில்லை என பல்கழைக்கழக ஆசிரியர் சங்கம் எடுத்துள்ள முடிவால் கல்வி நடவடிக்கைகள் இன்னும் தடைப்பட்டே கிடக்கின்றன. ஆயிரக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலம் அங்கு முடங்கிக் கிடப்பதை யாரும் புரிந்துகொள்ளத் தயாரில்லை. அவ்விளைஞர்கள் மட்டுமே தெருக்களில் தடியடிகளைத் தாங்கிக் கொண்டு பெருங்குரலிற் கத்துகின்றார்கள். பறைவெடித்த செவிகளைக் கொண்டுள்ள பெருமனிதர்களுக்கு எங்கே கேட்கப் போகின்றது அவர்களின் குரல். ஆனால் இக் கணத்தில் இலங்கையின் படித்த சமூகம் எனச் சொல்லிக் கொள்ளும் சமூகத்தின் கடமையென்ன? என்பதே எம் கேள்வியாகும். கிழக்குத் தேர்தலில் ஓர் இளம் பல்கலைக்கழக மாணவனை நாம் தேர்வுசெய்து அனுப்பியுள்ளோம். அவராவது அரசியல் வாதிகளின் மனநிலைக்கப்பால்ச் சென்று தம்மைப் போன்ற இளைஞர்களின் எதிர்காலத்திற்காக போராட முன்வருவாரா?

-ஆசிரியர்-

## விஜயராஜ் உயிரிழந்தார்

ஷேர் ஆட்டோ டிரைவர் விஜயராஜ் "இந்தியாவுக்கு ராஜபக்ஷ வருவதைத் தடுக்க வேண்டும்" என்று முழக்கமிட்டவாறே திங்கட்கிழமை காலை சேலம் பழைய பேருந்து நிலையம் அருகே தமது உடலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.
உடலில் 80 வீதம் தீக்காயத்துடன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சை பலனளிக்காமல் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

## சேனைக்குடியிருப்பில் கமநல சேவை மத்திய நிலையம் திறப்பு.

பதினைந்து இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சேனைக்குடியிருப்பு கமநலசேவை மத்திய நிலையத்தின் திறப்பு விழா அக் கமநல சேவை அபிவிருத்தி குழுவின் தலைவர் ஏ.அப்துல்கபூர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரும், பொறியியலாள ருமான என்.சிவலிங்கம் அவர்களும், கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஏ.ஆர். அப்துல் லதீப், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஏ.பி. மௌலானா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## நீரழிவு நோயாளிகளுக்கு இலவச பரிசோதனைப் புத்தகங்கள்.

கடந்த 19.09.2012 அன்று திருக்கோணமலை லயன்ஸ் கழகத்தால் திருமலை லியோ கழகத்தின் உதவியுடன் திருக்கோணமலை தளவைத்திய சாலைக்கு வரும் நீரழிவு நோயாளிக்கு இலவச வைத்திய பரிசோதனை புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டது. லயன்ஸ் கழக ஆளுனர் Lion B. ஜனரஞ்சன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்நிகழ்விலே திருமலை வைத்தியசாலை இயக்குனர் Dr. குணாளன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் திருமலை லியோ கழக ஆலோசகர் உதயசங்கர் மற்றும் லயன்ஸ், லியோ கழக உறுப்பினர்கள் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## மலைமுரசு வாசகர் சந்திப்பு

மலைமுரசு வாசகர் சந்திப்பு கடந்த 18.09.2012 செவ்வாக்கிழமை மூதூரின் கட்டைப்பறிச்சான், சேனையூர், கிளிவெட்டி மற்றும் சுச்சிலம்பற்று ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. மலைமுரசின் பிரதம ஆசிரியர் திரு. ஸ்ரீ. ஞானேஸ்வரன் தலைமையில் சென்றிருந்த ஊடகக் குழுவினர் குறித்த பகுதி மக்களின் வாசிப்புப் பழக்கம் தொடர்பாகவும், மக்களின் பிரச்சனைகள் தொடர்பாகவும் கிராமங்கள் தோறும் நேரில் சென்று கேட்டறிந்து கொண்டதோடு அப்பிரதேச கல்வி வளர்ச்சி தொடர்பாகவும் கேட்டறிந்தனர். கட்டைப்பிச்சான் விபுலானந்தா வித்தியாலயம், சம்பூர் மகாவித்தியாலயம், சேனையூர் மத்திய கல்லூரி, கிளிவெட்டி மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளின் கல்விச் சேவை தொடர்பாகவும் குறைபாடுகள் தொடர்பாகவும் குறித்த குழுவினர் நேரில் தகவல்களைப் பெற்றுக் கொண்டார்கள் அத்தோடு கிராமங்கள் தோறும் வாசிப்பை ஊக்குவித்தல் தொடர்பான மக்கள் கருத்தாடல் அன்று மாலை கட்டைப்பறிச்சான் சன சமூக நிலையத்தில் 4:15 மணியளவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் கடமையின் கொடுப்பனவு அட்டவணை.

நடைபெற்று முடிந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களில் பணியாற்றிய அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் பற்றிய 2012/01 இலக்க சுற்றறிக்கை தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்க்கான கொடுப்பனவு விபரத்தைத் தாங்கிய அட்டவணை வருமாறு:

| அரச உத்தியோகத்தர்கள் | கொடுப்பனவுகள் |
|---|---|
| சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு | 2500/= |
| கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு | 1400/= |
| கனிஷ்ட ஊழியருக்கு | 1000/= |
| வாக்கெடுப்புடன் தொடர்புடைய கடமைகளில் ஈடுபட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிக்கு | 2750/= |
| வாக்கெடுப்பு பெட்டிகளை விநியோகித்தமை தொடர்பான கடமையில் ஈடுபட்ட உதவி | 750/= |
| சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுநர் | 650/= |
| கனிஷ்ட ஊழியருக்கு | 500/= |
| வாக்கு கணக்கெடுப்பு கடமையில் உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு | 3500/= |
| சிரேஷ்ட தலைமை தாங்கும் | 2250/ |
| கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் | 1950/= |
| கனிஷ்ட ஊழியருக்கு | 1150/= |

என மேற்கண்ட வகையில் தேர்தல் பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னம் தாங்கிய மாணவத் தலைவர்கள்



திருகோணமலை கிண்ணியாவின் ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தின் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வானது 17.09.2012 அன்று காலைக் கூட்டத்தின் போது நிகழ்ந்தேறியது. ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலய அதிபர் திரு. க.இராஜசேகர் தலைமையில் நடைபெற்ற இச்சின்னம் சூட்டும் நிகழ்வில் அப் பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.பி.சுப்ரமணியம் அவர்களும், ஓய்வபெற்ற ஆசிரியை திருமதி. ப. கனகரெட்னம் அவர்களும் மாணவர் தலைவர்களுக்குச் சின்னங்களை சூட்டி கௌரவித்தனர்.

**நடந்துமுடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருக்கோணமலை மாவட்ட வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை**





கிண்ணியாவின் ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தின் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான மாணவர்கள் பங்குபற்றிய மாதிரிச் சந்தை வர்த்தக அமைப்பு அப்பாடசாலையின் தங்கராசா மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியுள்ளது. 19.09.2012 அன்று காலை 09 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வினை அதிபர் திரு. க.இராஜசேகர் ஆரம்பித்து வைத்தார். பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்த இச் சந்தையில் அவர்கள் கொள்வனவில் ஈடுபட்டு விற்பனையில் ஈடுபட்ட பள்ளிக் குழந்தைகளுக்குப் பெரும் உற்சாகத்தையும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாரம் வரலாற்று அறிமுகம்

சென்ற வார தொடர்ச்சி

இங்குள்ள மக்களிடம் வழங்கி வருகின்ற அசோதேயன் என்கிற மன்னன் பற்றிய கதைகளும் இந்த வரலாற்று ஓட்டத்தில் இணைக்கப்பட வேண்டியதே.

**சிற்பங்கள் சொல்கின்ற வரலாற்று செய்திகள்**



ஒரு பிரதேசத்தின் வரலாற்றில் பழங்கால சிற்பங்களும் ஓவியங்களும் மிக நம்பிக்கைக்குரிய சான்றுகளாக உள்ளன. உலக மனித வரலாற்றை குகைகளில் புராதன மனிதன் தீட்டிய ஓவியங்களே பின்னகர்த்தி சென்றன. அதுபோலவே இப்பிரதேசத்தில் காணப்படும் சிற்பங்கள் நமக்குச்சில வரலாற்றுச் செய்திகளை சொல்கின்றன. தமிழ் நாட்டினுடைய வரலாற்றில் பல்லவர்கால சிற்பங்கள் புடைச்சிற்பங்களாக செதுக்கப்பட்டன. சம்பூரில் பத்திரகாளி கோயிலில் காணப்படுகின்ற பழைய பத்திரகாளி சிற்பம் புடைப்பு சிற்பமாகவே உள்ளது. மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுகளை இச்சிற்பம் கொண்டுள்ளது. இது பல்லவர் காலத்தின் பிற்கூற்றை நினைவுபடுத்துகிறது. கி.பி ஏழாம் நூற்றாண்டின் கடைசிக்கால பகுதியைச் சேர்ந்த சிற்பமாக இது இருக்கலாம் போல தெரிகிறது. இந்தச் சிற்பத்தைப்போலவே கட்டைப்பறிச்சான் அம்மன் நகரில் காணப்படுகின்ற அம்மச்சியம்மன் சிலையும் ஒத்த தன்மையுடையதாக உள்ளது.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருக்கோணேஸ்வரத்தை பாடுகின்ற போது

**கரைகளு சந்தும் காரகிற் பிளவும்**
**அளப்பெரும் கனமனி வரன்றிகுரைகட**
**லோதம் நித்திலம் கொலிக்கும்**
**கோணமாமலையமர்ந்தாரே**

எனும் வரிகளில் வருகின்ற கரைகளு சந்து, காரகிற் பிளவு ஆகியன கொட்டியாரத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட விலை பொருட்களாக உள்ளன. அடுத்த வரிகளில் வருகிற நித்திலம் என்னும் சொல் முத்தைக்குறித்து நிற்கிறது. மூதூர் கடற்கரையோரப் பகுதிகள் முற்காலத்தில் முத்துக்குளிக்கும் இடங்களாக இருந்தன. அதன் காரணத்தினாலேயே முத்தூர் எனப்பெயர் பெற்று பின் மூதூராயிற்று. இது கொட்டியாரத்தினுடைய வரலாற்றின் தொடர்ச்சியை மேலும் உறுதிப்படுத்தி நிற்கிறது.

**சோழர்கால சான்றுகள்**

சோழராட்சிக்காலத்தில் இப்பிரதேசம் சோழமன்னர்களின் முக்கிய ஆட்சிப்பிரதேசமாக இருந்துள்ளது. சோழர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களை பிரமோதயங்கள் என்று அழைத்தனர். கொட்டியாரமும் தனியான பிரமோதயமாகவே கருதப்பட்டுள்ளது. பிரமோதயங்கள் வள நாடுகள் என குறிப்பிடப்பட்டு அந்த வள நாடுகளுக்கு பொறுப்பானவர்கள் கானகன் என அழைக்கப்பட்டனர். தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தின் சுற்று மதிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் கொட்டியார கானகன் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. In the royal temple raja raja and instrument of imperial cola power என்ற கீதா வாசுதேவன் எழுதிய நூலில் 87ம் பக்கத்தில் கொட்டியாரம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கொட்டியாரத்தில் இருந்து தஞ்சைப்பிரகதீஸ்வர் கோயிலுக்கு நெல்லும் தங்கமும் எண்ணையும் வரியாக செலுத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது.

சோழர்கால சான்றுகளில் அவர்களது கல்வெட்டுக்களும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன. மூதூரில் இருந்து செல்கின்ற போது நான்காம் கட்டைக்கு பக்கத்தில் உள்ள மூன்றாம் கட்டை மலை என்று சொல்லப்படுகின்ற ராஜவந்தான் மலையில் கிழக்கு அடிவாரத்தில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. அக்கல்வெட்டில் மேற்குறிப்பிட்ட மலையில் ஒரு கோயில் இருப்பதாகவும் மலையில் இருந்து பார்க்கிற போது கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிகிற வயல் நிலங்கள் கோயிலுக்கு சொந்தமானது எனவும் சொல்லப்படுகிறது. இக்கல்வெட்டை வாசித்த க.இந்திரபாலா இதை உறுதிப்படுத்தியுள்ளார். ராஜேந்திர சோழனது காலத்தின் எழுத்து நடை இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ராஜேந்திர சோழன் பெயராலேயே இந்தக்கல்வெட்டு உள்ளது. கங்குவேலி சிவன் கோவிலில் காணப்படுகின்ற ஒரு கல்வெட்டு சோழர் காலத்தையே குறிப்பிட்டு நிற்கிறது. மேலும் அகழ்வாராய்ச்சிகள் செய்யப்படுகிற போது நிறையவே நாம் தகவல்களைப் பெறலாம்.

இதனை விட சம்பூர் பிரதேசத்தில் காணப்பட்ட தொட்டில் கல்லை ஒத்த அழிபாடுகள் சேனையூர் வீரபத்திரன் கோயிலில் காணப்படுகின்ற பொலன்னறுவை சிவன் கோவில் பாணியிலான அடித்தளமாக அமைந்த கட்டிட இடிபாடுகள், தில்லங்கேணியில் வைத்து வழிபட்ட தற்போது கட்டைப்பறிச்சான் கும்பத்துமாவின் பக்கத்தில் வைக்கப் பட்டுள்ள சிலைகள் இப்பிராந்தியத்தில் சோழச் செல்வாக்கினை மேலும் உறுதிப்படுத்துகிறது. மல்லிகைத் தீவிலுள்ள பழைய சிவன் கோவிலுக் கான அடிப்படைகள் சோழச் செல்வாக்குக்கு உட்பட்டதே.

**பேராசிரியர் பால சுகுமார்**

**திருமங்கலாயும் சோழர்களும்**

அகஸ்தியஸ்தாபனம் என்று அழைக்கப்படும் திருமங்கலாய் பிரதேசம் சோழமன்னர்களின் இராசதானியாய் இருந்ததற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளது. அங்குள்ள கட்டிட அழிபாடுகள் அதனை நிரூபிக்கின்றன. இங்குள்ள சிற்பங்கள் சிவலிங்கம் என்பன சோழர் காலத்தவையே என்பதை தொல்லியலாளர்கள் நிரூபித்துள்ளனர். பொலநறுவையில் உள்ள சோழர்களின் சிவன்கோயிலை ஒத்த தன்மை இங்கு காணப்படுகிறது. இப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு எழுந்த திருக்கரசைப்புராணம் புராண ரீதியாக சிவபெருமானின் திருமணத்தோடு தொடர்புபட்டு அகத்தியர் ஈழ நாட்டுக்குரியவர் என்பதையும் வலியுறுத்துகிறது.

-தொடரும்-

# பிஞ்சு மனங்கள்

அஞ்சலியும் கீதாவும் நல்ல நண்பர்கள். இருவரும் தரம் ஐந்தில் படித்து வருகின்றனர். கீதாவின் வீடும் அஞ்சலியின் வீடும் அருகருகே இருந்தது. இருவரும் நன்றாக படிக்கக் கூடியவர்கள். அன்று புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியது. அஞ்சலியும், கீதாவும் ஆர்வத்துடன் பாடசாலை சென்றனர். பாடசாலை சென்ற இருவருக்கும் ஓர் மகிழ்ச்சியான செய்தி காத்திருக்கிறது. ஆம்.... இருவரும் பரீட்சையில் சித்தியடைந்து விட்டனர். இருவரும் மகிழ்ச்சியோடு வீட்டை அடைந்தனர். அஞ்சலி தன் அம்மாவிடம் சென்று தான் சித்தியடைந்ததை சொன்னாள். அஞ்சலியின் அம்மாவுக்கோ ஒரே மகிழ்ச்சி. அஞ்சலியை கட்டியணைத்து முத்தமிட்டார். தனது மகள் சித்தியடைந்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைந்தார். அதற்கான அஞ்சலிக்கு அழகாக ஒரு பொம்மையை பரிசாக அளித்தார்.

அதே போல கீதாவும் சித்தியடைந்ததை தனது அம்மாவிடம் சொன்னாள். அவளது அம்மா மிக விலையுயர்ந்த பட்டுப்பாவடை ஒன்றை பரிசாக அளித்தார். அந்த உடை கீதாவுக்கு மிகப்பிடித்திருந்தது. நண்பிகள் இருவரும் தமக்கு கிடைத்த பொருட்களை பரிமாறிக்கொள்ள விரும்பினார். இருவரும் ஒருவரை யொருவர் சந்தித்தனர். அஞ்சலி தனக்கு கிடைத்த பரிசை கீதாவிடம் காட்டினாள். கீதா அந்த அழகிய பொம்மையை வாங்கிப் பார்த்தாள்.

கீதாவின் கையிலிருந்து தவறுதலாக பொம்மை கீழே விழுந்தது. என்ன பரிதாபம்....? அந்த பொம்மை உடைந்து விட்டது. அதைக் கண்ட அஞ்சலி அழுது கொண்டே கீதாவை தள்ளிவிட்டாள். கீதாவோ அருகிலுள்ள சேற்றினுள் விழுந்து விட்டாள். கீதாவுக்கும் அழுகை வந்தது. இருவரும்




அழுது கொண்டே தங்கள் அம்மாவிடம் நடந்ததை சொன்னார்கள். இருவரது அம்மாவும் தங்கள் மேல் உள்ள நியாயத்தை வைத்துக் கொண்டு தெருவில் நின்று சண்டை பிடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களது சத்தம் தெரு முழுவதும் கேட்டது சத்தம் கேட்டு அருகிலுள்ளவர்கள் சண்டை நடக்கும் இடத்திற்கு விரைந்தனர். நேரம் செல்லச் செல்ல சண்டையின் வேகம் கூடிக் கொண்டிருந்தது. திடீரென கீதாவின் அம்மாவும், அஞ்சலியின் அம்மாவும் சண்டையிடுவதை நிறுத்தி விட்டு தமது குழந்தைகளை பார்த்தனர். என்ன ஆச்சரியம் சிறுவர்கள் இருவரும் அங்கு மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தனர். இதனைக் கண்ட தாய்மார் இருவருக்கும் சிறுவர்களது குண இயல்பு அப்போதுதான் புரிந்தது. பெற்றோர் இருவரும் தமது அறியாமையை நினைத்து வெட்கப்பட்டனர்

-மனோஜினி-

## வெற்றிக்கு வழி

1. தூங்கும் போது காண்பது கனவல்ல தூங்காமல் இருக்கச் செய்வதே கனவு. எனவே கனவு காணுங்கள்.
2. அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் உண்மையான விவேகம் என்கிறோம்.
3. பேச்சு பெரியதுதான் ஆனால் மௌனம் அதைக்காட்டிலும் பெரிது.
4. மரியாதைக்கு விலையில்லை ஆனால் அது எல்லாவற்றையும் எளிதில் விலைக்கு வாங்கி விடுகிறது.
5. கடினமான உழைப்பு என்பதே தெய்வ வழிபாடுதான்.

**அற்புதப் பொன்மொழிகள்.**

1. உலகில் சாகாவரம்பெற்ற பொருள்கள் :- புத்தகம், கதை
2. அறிவால் உழைப்பவர் ஆளுகின்றனர். உடலால் உழைப்பவர்கள் ஆளப்படுகின்றனர் - சீனா.
3. நல்ல நட்பை இழப்பதை விட பணத்தை இழப்பது மேலானது - வேதாந்தம்
4. நல்ல முறையில் பழகத் தெரிந்தவனும் நற்குண மள்ளவனுமே நல்ல நண்பர்களுள் சிறந்தவர் - நபி
5. ஒருவருடைய சொல்லும் செயலும் பிறரை துன்புறுத்தவில்லையாயின் அவனே மனிதன் - நபி-
6. அரசன், ஆசிரியன், நண்பன், புத்திசாலி, மடையன் இவர்களோடு தர்க்கம் செய்யாதே - சாணக்கியன்-
7. சகோதர உணர்ச்சி தோன்றா தவரை வேற்றுமை யிருக்கும் - அம்பேத்கர்-

**வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்**

தொடர்புகளுக்கு:
159A, 2ம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com,
0754252042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லும் செயலும் சுயநலமும்

தேர்தல் பரபரப்பு இப்போது ஒருவாறு அடங்கிவிட்டது நான் முதன்முதல் தேர்தலை எப்படி அறிந்து கொண்டேன் என்பதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

நான் தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். எனது தாயாரின் ஊர் மட்டுவில் வடக்குச் சாவகச்சேரியைச் சேர்ந்தது. இதிலே எங்களது முகவரி தகப்பனாரின் ஊர் வடமராட்சி அல்வாய் அல்வாய் மேற்கு பேச்சியம்மன் கோவில் மேல் பார்த்து தேவசகாயத்தின் கைவசம் கொடுக்கவும் என்று கடிதங்களுக்கு முகவரியிடப்பட்ட காலம் அது.

எங்கள் பிரதேசத்துக்கு தந்திப் பியோன் வந்தால் அது மரணச் செய்தியைத் தாங்கியதாகவே இருக்கும். பரபரப்பாக இருக்கும்.

இன்று அந்தத் தந்தியின் கடமை எவ்வளவோ நன்மைக்காரியங்களை, வேலைவாய்ப்புக்களை விடுமுறைகளை, வாழ்த்துக்களை தாங்கியதாக மாறி செல்போன் வந்து S.M.S என குறுஞ்செய்தியாகச் சுருங்கி விட்டது.

எனது உறவினர் (குஞ்சியப்பு) ஒரு பிரபலமான ஆயுள் வேத வைத்தியர் அவரிடம் ஒரு X மொடல் கார் இருந்தது. அவரது காரில் பச்சை, மஞ்சள் சிவப்புகலந்து கொடி தேர்தல் காலத்தில் பறக்கும். காரின் மேற் கூரையில் சிறிய வீடு ஒன்று அழகப் பொருத்தபட்டிருக்கும் வீட்டுக்கு நேரே புள்ளடி போடுங்கள் என்ற வாசகம் பெரிதாக எழுதப்பட்டிருக்கும். தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி என்பன சாவகச்சேரியின் பிரதான போட்டி யாளர்கள். சைக்கிள் சின்னம் குமாரசாமிக்கும் வீட்டுச் சின்னம் தாடி நவரத்தினத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

தேர்தல் கூட்டங்கள் கிராமம் கிராமமாக நடக்கும் V.N. நவரத்தின த்தை ஊர்வலமாக அழைத்து வருவார்கள். எங்கள் ரத்தினம், நவரத்தினம் என்ற கோசத்துடன் ஆட்டம் பாட்டம் கோலாகலமாக நடக்கும். மட்டுவில் தமிழரசுக்கட்சியின் பலமான ஆதரவு பெற்ற ஒரு கிராமமாக விளங்கியது. தாடி நவரத்தினம் தொடர்ச்சியாக சாவகச்சேரியைப் பிரதிநிதித்துவப் படுத்திய வரலாறு பின்னர் சிந்தித்தது.

இதே நேரத்தில் கிராமசபை க்கான தேர்தல்களும் இடைக்கிடைவரும் அம்மாவுக்கு சாவகச்சேரி தொகுதியிலும் பருத்தித்துறையிலும் வாக்காளர் டாப்பில் பெயர் இருந்தது. அல்வாயிலிருந்து சுமார் 13 மைல் தொலைவிலுள்ள மட்டுவிலுக்கு தனியார் பஸ் ஓடிக்கொண் டிருந்தது. மட்டுவிலுக்கு அந்த பஸ் போகாது. கனகம்புளியடிச் சந்தியால் திரும்பி பெருங்குளம் போய் சாவக்கச்சேரிக்கு அந்த பஸ் போகும். நாம் மட்டுவிலுக்குப் போவதாயின் கனகம்புளியடிச் சந்தியில் இறங்கி நடந்து போகவேண்டும். பருத்தித்துறை போவதாக இருந்தால் கனகம்புளியடி வந்து பஸ் எடுக்க வேண்டும்.

காலை கொழும்பிலிருந்து புறப்படும் யாழ் தேவி சாவக்கச்சேரியில் தரிக்கும் நேரம் சரியாக பகல் 1 மணி 05 நிமிடம். எங்களது கடிகாரமாக நாங்கள் யாழ்தேவியின் சத்தத்தையும், அதனுடைய கோர்ண் ஒலியையும் வைத்திருந்தோம். கட்டைவேலி கிராமசபை தேர்தல் வேட்பாளர்கள் அம்மாவின் ஒரு வாக்குக்காக மட்டுவிலுக்கு வாகனம் அனுப்பி அம்மாவை ஏற்றியதை நான் இரண்டு மூன்று தடவைகள் அனுபவித்தி ருக்கிறேன். தட்டு முட்டுச்சாமான்களுடன் தகப்பனாரின் ஊருக்கு வேட்பாளரின் காரில் வந்த சம்பவத்தை நினைக்க வெற்றியைத் தீர்மானிக்க ஒரு வாக்கு தேவைப்பட்டதை அறியும் சந்தர்ப்பம் பின் வந்த நாட்களில் தான் ஏற்பட்டது.

பொன்னம்பலம் கந்தையா என்னும் கம்யூனிஸ்ட் வடமராட்சியின் பருத்திதுறை தொகுதியில் வெற்றி பெற்றமை ஒரு முக்கியமான சம்பவம் அதன் பிறகு ஒரு கம்யூனிஸ்ட் கூட வடபகுதியில் வெல்ல முடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் சின்னம் நட்சத்திரம். வடமராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களின் தொகை கணிசமாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அவர்களது கட்சியாகவே பேசப்பட்டது கோப்பாய் தொகுதியும் அத்தகையதே. பிற்காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பருத்தித்துறையிலிருந்து தொகுதி பிரிந்த உடுப்பிட்டித் தொகுதியின் வேட்பாளராக திரு. இராசலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியால் வேட்பாளராக நியமிக்கப்பட்டு வெற்றி பெற்றமையும் இதனாலேதான் என்பதும் ஒரு நிதர்சனம்.

கொஞ்சம் கொஞ்சமாக நான் ரஸ்யா விருப்புக் காரணமாக மாறத் தொடங்கினேன். ரொக்கற்றுக்களை விண்வெளிக்கனுப்பியமை "லைக்கா" எனும் நானய விண்ணுக்கு அனுப்பிய புகைப்படங்களை கம்யூனிஸ்ட் கட்சி கண்காட்சிகள் வைத்து காட்சிப்படுத்திக் கொண்டிருந்தமை V.பொன்னம்பலம் போன்றவர்கள் அக்கண்காட்சிகளில் அழகான சொற் பெருக்கினை ஆற்றிக் கொண்டிருந்தமை என்னை ஆகர்ச் சித்தன. பிற்காலங்களில் யூரி காகரின் என்ற பெயர் பரவலாக எம்மத்தியில் அடிபடத் தொடங்கியது. ரஸ்யா விண்வெளிக்கனுப்பிய முதல் மனிதன் அவர். அந்த மனிதன் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணமும் வந்திருந்தார். அவரது ரஸ்யமொழியிலான பேச்சை V.பொன்னம்பலம் மொழி பெயர்த்தார். ஏ.பொன்னம்பலத்திற்கு ரஸ்யப்பாசையும் தெரியும் என்று ஒரு புகழ் பேச்சு அப்போது யாழ்ப்பாண மக்கள் மத்தியில் உலாவியது பிற்காலத்தில் ஏற்கனவே சமகால மொழி பெயர்ப்பு பாரளு மன்றத்தில் நிகழ்த்தப்பட்டமை போல ஆங்கிலம் வழி தமிழில் அந்த மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதாக நான் அறிந்து கொண்டேன்.

பொன்னம்பலம் கந்தையா இறந்த பின்னர் அடுத்து வந்த தேர்த லிலோ அல்லது அதன்பிறகு வந்த தேர்தலிலோ உடுப்பிட்டித் தொகுதியில் கொங்கிரஸ் வேட்பாளரான மு.சி சிதம்பரத்தை எதிர்த்து பொன். குமாரசாமி போட்டியிட்டார். பருத்தித்துறைத் தொகுதியின் கம்யூனிட் கட்சியின் வேட்பாளராக திருகா சிவதம்பியின் பெயர் அடிபட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இறுதியில் கே. மோதிலால் நேரு என்னும் இளைஞர் பருத்தித்துறை வேட்பாளராக நட்சத்திரச் சின்னத்தில் போட்டியிட்டார். இவர் ஒரு சட்டபீட மாணவர்.

-நந்தினி சேவியர்-

தொடரும்

# சங்க கால வியாபார தொடர்புகள் ! திருமலையில்!!

(கா.செந்தூரன்)

திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மூதூரில் கட்டைபறிச்சானில் உள்ள கணேசபுரம் கிராமத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள குன்றுதான் கச்சக்கொடி மலை. மூதூர் நகருக்கு அருகாமையில் உள்ள "ராஜவந்தான் மலை(மூன்றாம் கட்டை மலை) தொடக்கம் இளக்கந்தை என்ற ஊர் வரை நீளும் "படைகுமித்த கல்" குன்று வரையிலான குன்றுத்தொடர்களில் உயரமான குன்று இதுதான். இங்கு காணப்படும் கல்வெட்டு இலங்கையில் தமிழரின் பண்டைய இருப்பையும் அவர்களது வியாபார நடவடிக்கைகளுக்கும் ஆதாரமாக திகழ்கிறது.

இந்த கல்வெட்டை படி எடுத்த பேராசியர் க. இந்திரபாலா அவர்கள் இதில்

ப ரு ம க தி ச பு த லெனே
சகச சங்கமய

என்ற எழுத்துக்கள் இருப்பததாக கண்டு பிடித்தார்

முதலில் இது எந்த மொழிக்கு உரியவர்களின் எழுத்துக்கள் என்பதை ஆராய முற்படும் போது. இலங்கையில் காணப்படும் பல கல்வெட்டுக்கள் பல வியாபார குறிப்புகள் ஆகவும்.சமயம் சார்ந்த குறிப்புக்களாகவும் காணப்படுகின்றன.இதில் வியாபர குறிப்புக்கள் பிராகிருத மற்றும் தமிழ் பிராமிகளின் கலப்பு கொண்ட கல்வெட்டுக்கள் அதிகமாக காணப்படுகிறது. இதற்க்கு ஒரு காரணமும் உள்ளது. அக்கால இலங்கை இந்திய வியாபார ஆவணப்படுத்தல்களுக்கு பிராகிருதம் என்ற எழுத்து வடிவம் ஒரு பொதுவான வடிவமாக காணப்பட்டது.பிராகிருதம் என்பது தமிழ் பிராமி எழுத்து வடிவத்தில் இருந்து ஆரிய மொழி எழுத்து வடிவத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட



எழுத்து வரி வடிவம்(கொச்சை தமிழ் பிராமி) இதை திராவிடர்களும் ஆரியர்களும் விளங்கி கொள்ள கூடியதாக இருந்தபடியால் பிராகிருதம் வியாபார ஆவணப்படுத்தல் மொழியாக பயன்பட்டு வந்திருக்கிறது.இன்னும் விளக்கமாக சொல்லப்போனால் தற்போது ஆங்கிலம் வியாபார குறியீடாக காணப்படுவது போல தமிழ் கலந்த பிராகிருதம் தென்னாசிய வர்த்தகத்தில் காணப்பட்டு இருக்கிறது.

இதற்க்கு ஆதாரங்களாக தென்னாசிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் கலந்த பிராகிருத கல்வெட்டுக்களும் தமிழ் நாணய ங்களும் சான்று.




தமிழ் வியாபாரிகள் தாங்களுடைய வியாபர குறிப்புக்களை கூடுதலான தமிழ் பிராமி எழுத்துக்களுடன் பிராகிதத்துடன் கலந்து ஆவணப்படுத்தி உள்ளனர் அப்படி பிராகித மொழி காணப்பட்டாலும் அது தமிழ் பிராமிக்கு உரிய சாயலில் காணப்படும்..

அவ்வாறான குறிப்புத்தான் இந்த மலையில் உள்ள கல்வெட்டு. இந்த குறிப்புகளில் முற்று முழுதாக தமிழ் மொழியி லேயே தனது விளக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஆனாலும் இவை தமிழ் கலந்த பிராகிருத மொழியில் எழுதப்பட்டு உள்ளது.

இதில் வரும் "ம" என்ற எழுத்து முற்று முழுதாக தமிழ் பிராமிக்கு உரிய எழுத்து இலங்கையில் உள்ள அனேகமாக உள்ள கல்வெட்டுக்களில் இந்த தமிழ் பிராமிக்குரிய "ம" காணப்படுகிறது.அது மட்டும் அல்லாதாது இதில் காணப்படும் "க" "ச" "ப" "ய" ஆகிய எழுத்துக்கள் தமிழகத்தில் கண்டு பிடிக்கபட்ட கல் வெட்டுகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

இந்த கல்வெட்டில் காணப்படும் சொற்களை ஒவ்வொன்றாக ஆராயும் போது

ப ரு ம க

இது ஒரு நூற்றுக்கு நூறு தமிழுக்குரிய சொல்(திராவிட சொல்) .இது ஒரு இடுகுறிப் பெயர் சொல்(யடிளவசயஉவ ழெரெ)தமிழக மற்றும் இலங்கை யில் காணப்படும் கல்வெட்டுகளில் இந்த பட்டப்பெயர் அதிகமாக காணப்படுகிறது.இந்த சொல் சிங்கள வரலாற்று ஆசிரியர்களால் பாளி மொழிக்குரிய தலைவன் என்ற சொல் என்று கூறப்பட்டாலும் .எந்த பாளி இலக்கியங்களிலும் பருமக என்ற சொல் இடம் பெறவில்லை.

அதே வேளை பருமக என்பது பருமகன் என்ற சொல்லாகும் பிராகிருதம் கலந்த தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் "ன்" என்ற எழுத்து பயன் படுத்த பாடமையின் காரணமாக பருமகன் பருமக யாக காணப்படுகிறது. இந்த பரு மகன்



என்ற சொல் பெருமகன் என்ற சொல்லின் மறு வடிவம் .பெரு மகன் என்பது தலைவனை குறிக்கும் சொல் அரசனாகவும் வியாபார தலைவனாகவும் இதன் அர்த்தத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம்.(ஆதாரம் –இலங்கையில் தமிழும் தமிழர்களும்)

திச (திசன்)

இது ஒரு தமிழ் சிறப்புப்பெயர் சொல் (proper noun) .இது ஒரு நபருடைய பெயரை குறிப்பிடுகிறது. திச என்பது ஒரு தமிழ்




பெயர் சொல் ஆகும்.இதற்க்கு தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பல சான்றுகள் உள்ளன. தமிழ் நாட்டில் .அழகன் குளத்தில் உள்ள ஒரு ஊரில் கிடைத்த பண்டைய மட்பாண்டத்தில் திச என்ற பெயர் காணப்படுகிறது. இலங்கையில் அம்பாறை மாவட்டம் குடிவில் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் தீகவாவியில் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திச என்ற தமிழர் பெயர் காணப்படுகிறது அது மட்டும் அல்லாது அவர் தமிழர் என்ற ஆதாரத்துக்கான குறிப்புக்களும் காணப்படுகிறது. அனுராத புரத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் திச என்ற தமிழ் வியாபாரியும் அவரது கூட்டத்தாரும் ஒன்று கூடி வணிகம் நடத்த ஒரு மண்டபத்தை அமைத்தாக கூறப்பட்டுள்ளது.பருமக என்ற சொல்லில் "ன்" விடுபட்டது போல இதிலும் "ன்" என்ற எழுத்து விடுபட்டுள்ளது.அப்படியானால் இது திசன் என்ற சொல்லாக காணப்படுகிறது.

புத(பூதன்)

புத(பூதன்) என்ற சொல் பல்வேறு அர்த்தங்களை கொண்டதாக காணப்படுகிறது.

இது ஒரு சிறப்புப்பெயர் சொல்லாக (செழிநச ழெரெ) காணப்படுகிறது. அதாவது இது ஒரு நபருடைய பெயர் இப்பெயர்கள் கி.பி இரண்டாம் நூற்றாண்டு காலப்பகுதில் காணப்பட்ட பூத வழிபாட்டின் காரணமாக ஏற்பட்டு இருக்கலாம். அனுராத புரத்தில் புத என்ற சொல்லின் பெண்பால் சொற்கலான பூதி .சிவ்பூதி.சமணபூதி என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.அது மட்டும் அல்லாது அங்கு கிடைத்த ஒரு கல் வெட்டில் வெள்பூத(வேல் பூதன்) என்ற ஆண் பால் பெயரும் காணப்படுகிறது.அது மட்டும் அல்லாது தமிழர்களின் இருப்பை வெளிப்படுத்தும் சங்க இலக்கியங்களில் புத என்ற சொல்லுடன் தொடர்புடைய பெயர்கள் காணப்படுகிறது.

மிகுதி அடுத்த வாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை ஒரு குறிப்பு

அரங்காலயா பிரதீப்

ஒரு நாள் மாலை 5.30 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் மாலைப் பனிவீச்சில் குளிர்ந்த புற்தரையில் அமர்ந்து எனது நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவன் யதார்த்தத்திற்கு ஒவ்வாத விடயங்களை அடிக்கடி பேசிக் கொண்டிருப்பான். ஆனால் அவன் பேச்சுக்கு பின்னால் அபத்தமான யதார்த்தம் ஒன்று ஒட்டிக் கொண்டிருப்பதை பல சந்தர்ப்பங்களில் தாமதமாகி உணர்ந்திருக்கின்றேன். அன்றும் அப்படித்தான். அது பற்றியும். இது பற்றியும் பலதையும் பத்தையும் பகிடியாய் பேசினோம். திடீரென்று அவன் சொன்னான் "இந்த உலகம் அழகிய கலைப் பொருள்தானே. இதை உருவாக்கிய கடவுள் அருமையான கலைஞர்தானே. ஏவ்வளவு பிரம்மாண்டமாக நுணுக்கமாக ஒவ்வொரு பாகங்களாக டிசைன் பண்ணிருக்கு பாத்தியா" என்று எங்கேயோ பார்த்தபடி சொன்னான். நான் அவனை பார்த்தேன். இருவருக்கும் இடையே சிறிய அமைதி தோன்றியது.

இப்போது கலை என்ற சொல்லை இருவரும் பந்தாடிக் கொண்டிருந்தோம். அவன் தனக்கு தெரிந்தது, படித்தது எல்லாவற்றையும் சொன்னான். நானும் அப்படியே செய்தேன். சமகாலக் கலை பற்றியும், கலைஞர் பற்றியும். பழங்காலக் கலை பற்றியும், பண்பாடு பற்றியும் பலபல விடயங்களை அவ்வப்போது அரை வேக்காட்டுத் தனமாகவும், நுனிப்புல் மேச்சலாகவும் பேசியதில் இருந்து இன்னுமொரு தேடலுக்கான பாதைகள் எம்முன் விரிந்து கொண்டதை உணர்ந்தோம்.

உற்பத்திச் சந்தையில் போட்டி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மாற்றங்கள் தோன்றுகின்றன. புதிய புதிய நியமங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை காலமாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு கிளைகளை பரப்பி அகல விரிந்து வளர்கின்றது. அப்படியானால் கலை......? ஏன்ற கேள்வி எனக்குள்ளே எழுந்த மறு கணமே நண்பன் சொன்னான். உலக சந்தையில் மனித மூளைகள்தான் போட்டி போடுகின்றன. சிந்தனை இயந்திரமாக்கப்பட்டுள்ளது. ஏல்லாமே போட்டி மனப்பான்மையுடன் தான் செயலூக்கம் பெறுகின்றது. இயங்குதலின் பின்னணியில் போட்டி என்பது தவிர்க்க முடியாத சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. விதி விலக்காக போட்டியை புறந்தள்ளி மனிதனாக வாழ முற்படுபவன் உலகப் பார்வையில் தொலைந்து போகின்றான் என்பதை மறுப்பவர்கள் இன்னமும் உள்ளார்கள். கலைச் சந்தையில் நடந்து கொண்டிருப்பதும் இதுதான் என அவன் துணிவுடன் சொன்னதை ஏற்றுக்கொள்ள ஒரு கணம் தடுமாறினேன்.

அவன் சொன்னதில் ஒருவித உண்மை இருந்த படியால்தான் நான் தடுமாறினேன் என்பது உண்மை. ஒரு படைப்பை மீறி தன் படைப்பு ஆளுமை செலுத்த வேண்டும் என்பதில் போட்டி நிகழ்கின்றது. அப் படைப்பு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், பிரபல்யம் அடைய வேண்டும், அனைவரும் முணுமுணுக்க வேண்டும், பரிசில்கள் வேண்டும், மாலைகள் வேண்டும், கரகோசங்கள் வேண்டும் இவ்வாறு பல தேவைகளின் அடிப்படையில் போட்டி இடம்பெறுகின்றது. இங்குதான் கலை சந்தைக்கு கொண்டு வந்து நிறுத்தப்படும் வியாபார பொருளாக மாற்றம் கொள்கின்றது. போட்டியை புறம் நிறுத்தி மனிதனாக வாழும் சிலர் உலக பார்வையில் அகப்படாது போவது போலதான் உண்மையான கலைகளும், நேர்மையான கலைஞர்களும் மறைந்து விடுகின்றார்கள், மறைக்கப் படுகினறார்கள்.

அறிந்து கொள்வதற்கான முயற்சியை கலையை ஊடகமாக்கி அதனூடாக சாத்தியமாக்கிக் கொள்ளவும் முடியம். இதனைத்தான் "டியூவி" என்பவர் "கலை ஒரு அறிதலுக்கான முயற்சி" என கூறுகின்றார்.. சிந்தனையையும் கருத்தையும் வெளிப்படுத்துவதனூடாக முயற்சி ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. கலைஞர்கள் தங்களைச் சாதனமாக்கிக் கொண்டு பல குறியீடுகளை சிருஸ்டித்து கொண்டும் உத்திகளை தயாரித்துக் கொண்டும் பார்ப்போருடனும் சூழ உள்ளவர்களுடனும் தொடர்பாடல் பண்பை அழுத்தமாக பிரயோகிக்கின்றனர். கலை ஏதோ ஒன்றை சொல்லும் என்பதில் வெளிப்பாட்டுக் கோட்பாடு அறிதல் கோட்பாடு இரண்டிற்கும் நம்பிக்கை உள்ளது. நாளுக்கு நாள் புதியதாகவும் உறுதி நிலையற்ற உலக இயங்குதலில் தனிப்பட்ட ரீதியாகவோ சமூக ரீதியாகவோ நாம் எதிர் கொள்ளும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் தீர்வினை தேட வேண்டிய பாதையில் கலைக்கு இன்றியமையா பங்கு உள்ளது. இதனைப் புரிந்து நடக்கும் கலைச் செயலாளிகள் உருப் பெறுதல் அவசியம்.

கலையை அனுபவிப்பதனூடாக இன்புறுதல் அல்லது பொழுதை கழித்தல் என்பது மட்டுமே நோக்கமாக இருந்த காலத்தில் அழகு என்பதும், ரசனை என்பதுமே மேலோங்கி நின்றது. கால மாற்றத்தில் புதிய சித்தாந்தங்கள் உள்வாங்கப்பட்டு வலுப்பெற்ற செயலூக்கமிக்க சாதனமாக கலை மாற்றம் கொண்டது. பண்பாட்டின் வெவ்வேறு பட்ட தன்மையை அறிந்து கொள்ள சரியான வடிவம் கலைதான். கலையை புரிந்து கொள்வதனூடாக ஒரு சமூக அமைப்பின் பண்பாட்டை அளப்பதற்கான அளவுகோலை தெரிந்து கொள்கின்றோம். உணர்வு நிலை, கருத்து நிலை என இரு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமை பொருந்தியது கலை. இன்றைய இயந்திர சுழற்சி மிக்க வாழ்வு முறையில் கலை எடுத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பலமிக்கதாக அமைய வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கடந்து தான் கலை போட்டிக்குரிய வடிவமாக உருப்பெற்றுள்ளது. பந்தயக் குதிரைகளை ஓடவிட்டு பணம் சம்பாதித்துக் கொள்வது போன்று படைப்புக்களை உலாவவிட்டு ஒவ்வாமைகளை சம்பாதித்துக் கொண்டு பிணி பீடிக்கும் சமூதாயம் ஒன்றை கட்டியெழுப்ப யாரும் இடமளிக்க கூடாது என்பதில் உறுதி பூண வேண்டும். நோக்கம் சரியானதாக அமைய வேண்டும். பாதைகள் மாறுகின்ற போது நீண்ட கால இடைவெளியில் ஏற்படும் பிறழ்வுகளுக்கு பதில் கூறவேண்டிய கடமை ஒட்டு மொத்த கலைச்சமூகத்தைச் சாரும்.

புதிய புதிய தத்துவங்கள் கோட்பாடுகள் உருவாகி வாழ்வு கணித முறையில் நகர்கிறது. அளவுப் பிரமானங்கள், மதிப்பீடுகள், நிரல்படுத்தல்கள் என மனிதன் ஒரு சட்டகத்திற்குள் வாழ பழகிக் கொண்டான். கணனியில் மென்பொருள் பதியப்பட்டு இயங்குவது போல மனித மூளைகளும் புறோகிறாம் (Programe) செய்யப்பட்டுள்ளது. இந்த இறுக்கமான போக்கினை நெகிழ்வுத் தன்மை மிக்கதாக மாற்றிக் கொள்ள யாருமே முயற்சிப்பதில்லை எனலாம். அன்றாடம் உண்ணும் உணவையே ருசித்துச் சாப்பிட நேரமில்லாத மனிதனிடம் வாருங்கள் கலையை ரசிக்கலாம் என ஒலிபெருக்கி அறிவித்தல் செய்ய மனம் இடம் கொடுக்கவில்லை.

இப்படியான நிலையில் நாம் மீண்டும் மீண்டும் போட்டி மனப்பான்மையுடனும் பகட்டு நிலையிலும் கலையை பயன்படுத்த இடமளிக்கக் கூடாது. செயல் தெளிவும் சிந்தனைத் தெளிவும் மிக மிக அவசியமானது. சமூகத்தின் மீது உள்ள தார்மீகக் கோபத்துடன் சண்டையிடும் போதும் கூட கவனமாக இருக்க வேண்டும். சமூகம் என்பது என்னையும் சேர்த்துக் கொண்டது என்பது ஒவ்வொரு கணமும் ஞாபகத்திற்குரியது. புது வானம் புது பூமி தேட வேண்டாம். இருப்பவைகளை இனிதாக மாற்றிக் கொள்வோம். அதற்காக ஆரோக்கியம் மிக்க கலைப் போக்கினை கடைப்பிடிக்க துணிவோம்.

# சாம்பல்தீவு பொது நூலகம் ஒரு வரலாற்று நோக்கு


தகவல்: பிரபாலினி சிவகுமாரன்

மனித குலம் அச்சுக்கலையை அறிந்து கொள்ளும் முன்னரே நூலகங்கள் தமது சேவையை ஆரம்பித்து விட்டன. முன்னர் கோவில்களிலும் மடாலயங்களிலும் நூலகங்கள் இயங்கின. அரண்மனை நூலகங்கள் மன்னர், மந்திரி அவர்களின் ஆலோசகரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று நூலகங்களின் பயன்பாடு உயர்குடியினருக்கு மட்டுமன்றி சிந்தனை வளர்ச்சியினால் 'நூல்கள் அனைத்தும் பாவனக, ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு வாசகரை உடையது. ஒவ்வொரு வாசகரும் ஒவ்வொரு நூலை உடையவர். வாசகரது நேரத்தைப் பேணும், நூலகம் ஒரு வளரும் தாபனம்' என்ற கலாநிதி S.R ரங்கநாதன் அவர்களின் நூலகப் பஞ்சசீலக் கொள்கையின் படி நூலகங்கள் யாவருக்கும் உரித்துடையனவாக காணப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ சல்லி அம்பாள் தேவஸ்தானம் அமைந்துள்ள சல்லிப் பகுதியையும் மற்றும் ஆத்திமோட்டை, இலுப்பைக்குளம், மாங்கணாய் ஆகிய கிராமங்களையும் தன்னகத்தே கொண்டதும், மாங்கனியும் தேன் கனியும் எழிலுடனே காய்த்துக் குலுங்கும் செம்பாடு பூமியாம் சாம்பல்தீவு கிராமத்தில் சாம்பல்த் தீவின் பொது நூலகம் அமைந்துள்ளது.

மாங்கணாய்ச் சந்தியில் காளியம்பாள் கோவிலுக்கு முன்பாக உள்ள கட்டிடத்தில் 'நாமகள் வாசிகசாலை' என்ற பெயரில் திரு.கு.தம்பிஜயா அவர்களால் வாசிகசாலை நடாத்தப்பட்டு வந்தது. பின்னர் திரு.நாகலிங்கம் அவர்களாலும் இப்பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது. பின்பு 1952 ஆம் ஆண்டளவில் திரு.முருகேசு (கிராம சபைத் தலைவர்) அவர்களின் காலப்பகுதியில் கிராம முன்னேற்றச் சங்க கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. பின்பு கிராம சபைத் தலைவர்களாக இருந்த சி.மயில்வானம், திரு.வ.தம்பிராசா, திரு.இ.தங்கராசா, திரு.க.வேலாயுதம் ஆகியோராலும் தத்தமது காலப்பகுதியில் தொடர்ந்து இச்செவை முன்னெடுக்கப்பட்டு வந்தது. அப்பொழுது வாசிகசாலை ஒழுங்காக இயங்குவதற்கு திரு. த. சண்முகநாதன் (முன்னாள் கிராமசபை எழுதுவினர்) திரு.வே.இராசதுரை (முன்னாள் ஆசிரியர்) அவர்களது பங்களிப்புடனும் நடைபெற்றது. அக்காலத்தில் பத்திரிகைகள் தபால் போக்குவரத்து மூலம் கிடைக்கப்பெற்றது. தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளும் வாசகர்களின் வாசிப்பு திறனை அதிகரிப்பதற்காகவும், அறிவு வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் பயன்பட்டு வந்தது.

பின்னர் [illegible] வன்செயலால் [illegible] இயங்க முடியாது போய்விட்டது. 1990க்கு பின் கிராம சபையின் ஒரு பகுதியினுள் இவ் வாசிகசாலை இயங்கி வந்தது. அடுத்து கிராம முன்னேற்றச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் நிதியில் சாம்பல்தீவு பொது நூலகக் கட்டிடமானது 885 சதுர அடி பரப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 1993.07.30ந் திகதி அன்றைய பிரதேச சபைத் தலைவர் ஜனாப் ஏ.சகாப்தீன் அவர்களால் 'சாம்பல்தீவு பொது நூலகம்' என்ற பெயரில் திறக்கப்பட்டது.

தற்போது வாசிப்பு பகுதி, இரவல் வழங்கும் பகுதி, ஊசாத்துணைப் பகுதி, சிறுவர் பிரிவு, தன்னார்வ நிறுவன உதவியுடன் ஒரு கணனி தொகுதி கிடைக்கப் பெற்று கணனிப் பிரிவும் இயங்குகின்றது. பத்திரிகை நுணுக்குகள், சேகரிப்புகள், முக்கிய அம்சங்கள் போன்றவை சேகரிக்கப்பட்டு ஒரு தகவல் வழங்கும் தகவல் மையமாக செயற்பட்டு வருகின்றது இந் நூலகம். அத்துடன் நூலக வாரம், உள்ளூராட்சி வாரம், ஒக்டோபர் வாசிப்பு மாதம் போன்ற நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றது. அதற்கு தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம், தி/சல்லி அம்பாள் தமிழ் வித்தியாலயம், தி/ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் [illegible] அங்கத்தவர்களாக [illegible]பட்டு அவர்களிடையே போட்டிகள், கருத்தரங்குகள்



நடாத்தப்படுகின்றது.


அத்துடன் நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களுக்கிடையேயும் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டும் வருகின்றது. தூயி தசாம் பகுப்பாக்கத்திட்டத்தின் 21ம் பதிப்பிற்கு அமைவாக நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை தலைவர், செயலாளர், ஆகியோரின் வழிகாட்டலுடன் நூலக வாசகர் வட்டம், நூலக ஆலோசனை குழு உறுப்பினரதும், நூலக உதவியாளர்களின் வழிகாட்டலிலும் பொது நூலகம் சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்குகின்றது.

இந் நூலகம் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பிரதேச சபை நூலகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் 2010 இல் 2ம் இடத்தையும் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைவால் உருப்படுமா இரு கட்சிகளும் ?

எதிர்பார்த்தபடி எந்தவொரு அதிர்ச்சியையும் தராமல் முஸ்லிம் காங்கிரஸ் (மு.கா) ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனிக்குத் (ஐ.ம.சு.மு) தனது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்துவிட்டது. உடன்படிக்கைகளின் அடிப்படையிலேயே எந்தவொரு கட்சியுடனும் இணைவோம், அந்த உடன்படிக்கைகள் மக்களுக்குத் தெளிவாக வெளிக்காட்டப்பட்டிருக்கும், கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலத்தைச் சுபீட்சமாக்கும் வகையிலேயே இணைவு இருக்கும் எனப் பல்வகைப்பட்ட பேச்சுக்களின் பிண்ணனியில் மு.காவின் இணைவு ஐ.ம.சு. முண்ணனியுடன் நிகழ்ந்துவிட்டது. இவ்விணைவின் ஊடாக மு.கா தாம் அடைய நினைத்தவற்றை அடைந்துள்ளதா? எனும் கேள்வியை இனிக் கேட்பது அபத்தமே. ஏனெனில் மு.காவிற்கு வாக்களித்த சுதந்திர எண்ணங்கொண்ட முஸ்லிம் மக்கள் தாம் வாக்களித்த போது தமது நகங்களில் பூசப்பட்ட மையின் கறுப்பு தற்போது தம்முகத்தில் வரையப்பட்டு விட்டதாகக் கவலைகொள்ளத் தொடங்கிவிட்டனர்.





மு.காங்கிரஸ் ஐ.ம.சு.முண்ணனியுடன் இணையும் முடிவால் பெரும்பான்மைக் கிழக்குவாழ் மக்களால் கருத்திற்கொள்ளப்படாத கட்சியான ஐ.ம.சு.முண்ணனி ஆட்சிபீடம் ஏறியுள்ளது.. அதாவது ஆளும் ஐ.ம.சு.முண்ணனி பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 200,004 ஆகக் காணப்பட ஏனைய கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி 193,827 வாக்குகளையும், மு.கா 132,917 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 74,901 வாக்குகளையும் பெற்று மொத்தமாக ஏனைய கட்சிகள் 401,645 வாக்குகளை பெற்றுள்ள நிலையில் மக்களின் ஏகோபித்த ஆதரவு ஆளும் ஐ.ம.சு.முண்ணனிக்கு இல்லை என்பதை வெளிக்காட்டியுள்ளது கிழக்கின் தேர்தல். ஆனால் இந்நிலையில் மு.கா வின் இணைவால் அக்கட்சி ஆட்சிக்க மர்ந்துள்ளதானது மக்களின் ஏகோபித்த ஆதரவு என்பது வெறும் வெட்டுவேட்டு என்பதையே காட்டுகின்றது.

மு.கா வின் தலைவர் தம்முன் மூன்று வாய்ப்பபுக்களிருந்ததாக கடந்த வார இறுதியில் தெரிவித்திருந்தார். அவை ஐ.ம.சு.முண்ணனியுடன் இணைவது. அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது அல்லது சுயேச்சையாக அமர்ந்து கிழக்கு முஸ்லிம்களிற்குத் தேவைாயனவற்றைச் செய்ய முயற்சிப்பது என்பவையாகும் என தெரிவித்திருந்தார். ஆனால் அக்கணமே திரு. சம்பந்தன் அவர்களால் விடுக்கப்பட்டிருந்த செய்தியொன்றால் ஹக்கீமினால் குறிப்பிடப்பட்ட கடைசி வாய்ப்பான கிழக்கு மாகாணசபையில் சுயேச்சையாய் அமர்ந்து ஏதும் செய்ய லாம் என்பது பகற்கனவாகிப் போனது. சம்பந்தன் அவர்கள் தமது கட்சி அரசுடன் இணைவதும் சாத்தியமானதே என விடுத்த செய்தியே அது. இதனால் மு.கா ஒரு உறுதியான தீமானத்தை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படிருந்தது. அத் தீர்மானமானது ஒன்றில் ஆளும் ஐ.ம.சு.முண்ணனியுடன் இணைவது அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைவது என்பதே ஆகும். அதே வேளை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஒரு மிரட்டலை ஹக்கீமை நோக்கி விடுத்திருந்தார். அம் மிரட்டல் யாதெனில் கிழக்கில் யாருடன் இணைவது என்னும் தீர்மானமே மத்திய அரசில் ஹக்கீமின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்பதாகும். எனினும் முதலாவது பேச்சுவார்த்தையின் போது ஆளுங்கட்சியின் அமைச்சர் பசில் இராஜபக்ஸவின் தலைமையிலான குழுவின் முன் ஹக்கீம் வைத்த முதலாவது கோரிக்கையானது கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவி தமது கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும். ஆனால் இறுதியில் அம் முதலாவது வேண்டுகோளையே மு.கா விட்டுக் கொடுத்திருப்பது என்பது பெரும் பேரம் ஒன்றிற்காய்த்தான் இருக்க வேண்டும் என்பதையே வெளிக்காட்டுகின்றது.

தற்போதுள்ள நிலைமைகளில் ஆளும் ஐ.ம.சு.முண்ணனி அமைத்துள்ள ஆட்சியினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் அக்கட்சிக்கு எவையாக இருக்கும் என்பதைப் பார்க்கலாம். வடக்குக் கிழக்கின் பிரிப்பு என்பதே ஒரு தவறான விடயம் எனப் பேசும் பேச்சுக்களுக்கு இடும் ஓர் முற்றுப்புள்ளியாக ஐ.ம.சு. முண்ணனி இவ் ஆட்சி வாய்ப்பை உலகெங்கும் பறைசாற்ற முடியும். கிழக்கின் தனியலகில் பெரும்பான்மைக் கட்சியானது அதிகூடிய ஆசனங்களை வென்றுள்ளதானது கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தம்மையே சிறந்த தலைமைத்துவமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளதாகவும் ஐ.ம.சு.முண்ணனி கூறிக்கொள்ள முனையலாம். மேலும் கடந்த சனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் பொழுது இத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஆளும் ஐ.ம.சு.முண்ணனியின் வாக்குப்பலம் குறைவடைந்துள்ளதைக் காணலாம். கடந்த சனாதிபதித் தேர்தலில் 47.46 வீத வாக்குகளை வென்ற ஐ.ம.சு.முண்ணனி தற்போதைய மாகாண சபைத் தேர்தலில் 32.5வீத வாக்குகளையே வென்றுள்ளது. எனவே தற்போத கிடைத்துள்ள கிழக்கின் ஆட்சி அதிகாரத்தால் தனது வாக்கு வங்கியினை நிறைத்துக்கொள்ள ஐ.ம.சு.முண்ணனி முனையலாம். அம்பாறை மாவட்டத்தில் சுமார் 18 வீத வாக்குகளையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 13 வீத வாக்குகளையும், திருக்கோணமலையில் சுமார் 10 வீத வாக்குகளையும் இழந்துள்ள ஐ.ம.சு.முண்ணனி இழந்த வாக்குகளை மீளப் பெற்றுக்கொள்ளும் பிரயத்தனத்தில் தற்போது கிடைத்துள்ள மாகாண ஆட்சிக்காலத்தை ஐ.ம.சு முண்ணனி செலவிடக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் தனது கட்சியிலிருந்து அதிகூடிய விருப்பு வாக்குகளான 31,815 வாக்குகளை அம்பாறை மாவட்டத்தில் பெற்ற திசனாயக்க விமலவீரவை விடுத்து திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாவதாக 11,726 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள ஏ.எம்.எம் நஜீப்பை மாகாண முதலமைச்சராக நியமித்தமையானது முஸ்லிம் மக்களை அமைதிப்படுத்தும் ஓர் செயலாகவே காணப்படுகின்றது. அதாவது மு.கா தனது முதலாவது நிபந்தனையாக வைத்திருந்த மு.காவைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரையே முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் சிறிய ஒரு மாற்றமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மக்களுக்குக் காட்டவே ஐ.ம.சு.முண்ணனி முயன்றுள்ளது. மேலும் இந் நியமனத்தின் ஊடாக தனக்கு ஆதரவளித்த மு.காவை முஸ்லிம் மக்களின் அவச் சொற்களிலிருந்து காப்பாற்றும் ஓர் நடவடிக்கையாகவே இதனை ஐ.மு.சு.மு நிகழ்த்தியுள்ளது என மு.கா கருத வேண்டும் என்னும் நோக்கமும் ஐ.ம.சு.கூ உண்டு. ஆனாலும் அடிப்படையில் ஐ.ம.சு.மு இம் மாகாண முதலமைச்சர் நியமனத்தின் ஊடாக யாரைக் குறிவைத்துள்ளது என்றால் மு.காவின் தீர்மானத்தால் அதிருப்தியடைந்துள்ள முஸ்லிம் மக்களையே.

கிழக்கில் அதிருப்தி அடைந்துள்ள முஸ்லிம் மக்கள் எப்போதுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகத் திரும்ப மாட்டார்கள். அவர்களின் அடுத்த தேர்வாக இருக்கப்போவது ஐக்கிய தேசியக் கட்சியே. ஆகவே அவ்வாறு திரும்பவிருக்கின்ற மக்களின் கணிசமான தொகையினரை ஐ.ம.சு. முண்ணனி தனது பக்கம் ஈர்த்துக்கொள்ளும் குறியாகவே இம் மாகாண முதலமைச்சர் நியமனத்தைக் கருதலாம். மாகாண முதலமைச்சர் முஸ்லிம் மக்களுக்கான தனது சேவைகளை விரிவாக்கும்போது இயற்கையாகவே முஸ்லிம் மக்களின் வாக்குகளை ஐ.ம.சு.முண்ணனி வெட்டையாடக் கூடிய வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுவிடும். மேலும் இத் தேர்தலில் தனித்துப் போட்டியிட மு.கா தீர்மானித்தமையானது ஆளும் ஐ.ம.சு.முண்ணனி க்கு ஓர் எச்சரிக்கை மணியை அடித்திருந்தது. எப்படியும் மாகாண சபைத் தேர்தலின் பின் மு.கா தம்முடன் தான் இணைய வேண்டும் என்பது தெரிந்திருந்தாலும் கூட ஆளும் ஐ.ம.சு.முண்ணனி மாகாணசபைத் தேர்தலில் மு.கா தனியாகப் போட்டியிட்டதை சாதாரணமான விடயமாகக் கருதியிருக்காது. எனவே எதிர்வரும் தேர்தல்களில் முகாவின் பலத்தைக் குறைத்து தம்மைவிட்டு எப்போதுமே விலகாத கட்சியாக மு.காவை உருவாக்க வேண்டுமாயின் மு.காவின் கிழக்கின் வாக்குவங்கியைச் சிதைக்க வேண்டிய தேவை ஐ.ம.சு.முண்ணனிக்கு உண்டு. அவ்வாறு சிதைக்கும் போது சிதையும் வாக்குகளைத் தம்மை நோக்கி ஒருமுகப் படுத்தவே இம் மாகாண முதலமைச்சர் நியமனத்தை ஐ.ம.சு.முண்ணனி மேற்கொண்டுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது.

அடுத்து இலங்கை அரசானது 2014ன் இறுதிக் காலப்பகுதியில் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்தவிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத சில செய்திகள் கசிந்துள்ளன. எனவே அத்தேர்தல்க் காலப் பகுதியில் கிழக்கின் ஆட்சிப் பீடத்தில் இருந்தால் மட்டுமே நினைத்த இலக்குகளைக் கொய்யும் வாய்ப்பை ஐ.ம.சு.முண்ணனி பெற்றுக்கொள்ளும். எனவே இந்த ஆட்சி வாய்ப்பை முற்று முழுதாகத் தனது நீண்ட அரசியல் வாழ்நாளுக்காக ஐ.ம.சு.முண்ணனி பயன்படுத்திக் கொள்ளப் போகின்றது.

இனி இவ்வாறான விட்டுக்கொடுப்புக்களால் மு.கா சாதிக்கப் போவது என்ன என்பதைப் பார்க்கலாம். நிச்சயமாக மத்திய அரசில் மற்றுமோர் அமைச்சுப் பதவி மு.காவிற்குக் கிடைப்பதுடன் தற்போதுள்ள அமைச்சர் பதவியையும் தக்கவைத்துக் கொள்ளும் நிலையில் மு.கா உள்ளது. அம்மற்றைய அமைச்சுப் பதவி சிலவேளைகளில் கப்பல்துறை அமைச்சாக இருக்கலாம். அத்துடன் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சையும், ஐந்து முக்கிய திணைக்களங்களைத் தன்னகத்தே கொண்ட வீதி அபிவிருத்தி அமைச்சையும் மு.கா பெற்றுக்கொள்ளும் வாய்பபுக்கள் உள்ளது. அதற்கும் மேலதிகமாக மத்திய அரசில் சில பிரதி அமைச்சுப் பதவிகளை மு.கா பெற்றுக் கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை. எனவே ஐ.ம.சு.முண்ணனிக்கு ஆதரவளிக்கும் மு.காவின் தீர்மானம் பொருளாதார அடிப்படையில் அக்கட்சிக்குப் பெருத்த லாபத்தையே ஈட்டித்தந்துள்ளது. மேலும் முஸ்லிம் சட்டங்கள் முஸ்லிம் பெண்களுக்கு நீதியான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்களை மனித உரிமை ஆர்வலர்கள் எழுப்பி வருகின்றனர். அச்சட்டங்களில் முக்கியமாக பெண்களை மிக இலகுவாக வலுவான காரணங்கள் இன்றி விவாகரத்துச் செய்துவிடும் வாய்ப்பை (தலாத்) ஆண்கள் கொண்டிருப்பதானது மிக அநீதியானது என்னும் எண்ணம் மேலோங்கிய வேளையில் நீதி அமைச்சராக இருக்கும் ஹக்கீம் சட்டச் சீர்திருத்தங்களுக்கான குழுவை அமைத்து அக்குழு செயறபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவ் அமைச்சை இழக்க மு.காவோ அல்லது ஹக்கீமோ விரும்பமாட்டார். எனவே அவ்வமைச்சைத் தக்கவைத்துக்கொள்ளல் என்பது ஓரளவிற்கு மு.கா விற்கு முக்கியத்துவம் வாய்ந்ததே.

ஆனால் ஐ.ம.சு.முண்ணனியுடன் இணையும் தீர்மானத்தால் மு.கா தனது வாக்குகளை இழந்துவிடும் மிகப் பெரும் அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போராட வேண்டியிருக்கும். ஐ.ம.சு.முண்ணனியுடன் இணையும் தீர்மானத்தை மு.காவின் தலைவர் மு.காவின் அரசியல் தலைமைப் பீடத்தில் முன்மொழியவில்லை எனும் குற்றச்சாட்டு பலமாக எழுந்துள்ளது. மு.காவின் அரசியற் தலைமைப் பீடமானது 85 அங்கத்தவர்களைக் கொண்ட உயர் கட்டளைப் பீடமாகும். இக்கட்டளைப் பீடத்தின் அனுமதியை இணைவு தொடர்பாகப் ஹக்கீம் தற்போதாவது பெற்றுக்கொண்டாரா? என்னும் தகவலை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆகவே மு.கா சம்பாதிக்கப் போகின்ற அமைச்சுப் பதவிகளின் ஊடாக கிழக்கில் மு.கா மேற்கொள்ளவிருக்கும் மக்கள் நல வேலைத்திட்டங்களே அதன் அதிருப்தியாளர்களை அடங்கவைக்கப் போகின்றன. இதனைவிட முக்கியமாக ஐ.ம.சு.முண்ணனியுடன் இணைந்த கட்சிகளின் வரலாற்றைப் பார்க்கும் போது மு.கா கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கி விடயமொன்று புலனாகும். ஐ.ம.சு.முண்ணனியின் துணையுடன் ஆட்சிக்கட்டேறிய சனாதிபதியின் முதற் காலப்பகுதியில் அவருக்கு உறுதுணையாக இருந்த மக்கள் விடுதலை முண்ணனி என்ற கட்சி இப்போது எங்குள்ளது?. அக்கட்சிக்கு என்ன ஆனது? யார் அக்கட்சியை அழித்தார்கள்? அக்கட்சி மிகப் பலமாக இருந்தபோதே ஐ.ம.சு.முண்ணனியுடன் சேர்ந்தது. பின்னர் இரு கூறாகி இன்று நோக்கின்றி அலையும் கழுத்துவெட்டப்பட்ட கோழியாகிப் போய்விட்டது அக்கட்சி. அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியை மிக மெதுவாக ஆனால் உறுதியாக ஆட்டங்காண வைத்தது ஐ.ம.சு.முண்ணனி. இன்று கிழக்குத் தேர்தலில் நான்காவது கட்சியாகவே ஐ.தே.க மாறிவிட்டது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளின் ஊடாக மு.கா கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் உள்ளன.

எனவே இணைந்து ஆட்சியமைத்திருப்பதால் இவ்விரு கட்சிகளும் பெற்றுக்கொள்ளவிருக்கும் பெறுபேறுகளைப் பொறுத்திருந்து பார்க்கலாமே!

- மாயன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முரசின் விளையாட்டு செய்திகள்

## "வைன் கோப்பை" போட்டிகள் ஆரம்பம்

திருக்கோணமலையின் முன்னணி விளையாட்டுக் கழங்களான யங் ஒலிம்பிக், நோமன்ஸ், வேல்ஸ் ஆகிய விளையாட்டுக்கழகங்கள் விளையாடும் முக்கோண ஒருநாள் துடுப்பாட்டப்பாட்டிகள் எதிர்வரும் 23.09.2012 அன்று முற்றவெளி மைதானத்தில் நடைபெற உள்ளது. "வைன்கோப்பை" (WYN CUP) என பெயரிடப்பட்டுள்ளது.

இம் மூன்று கழகங்களினதும் ஆங்கில எழுத்துக்களின் முன் எழுத்துக்களை இணைத்து "வைன்கோப்பை" எனும் பெயர் உருவாக்கப் பட்டுள்ளமையானது இப்போட்டித் தொடரின் முக்கிய நோக்கமாகிய "விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதும், இளைஞர்களை ஊக்குவிப்பதும்" என்ற எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் என இப்போட்டியின் ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

இப்போட்டியில் எக்கழகம் வெற்றி பெறும் என திருமலையின் கிரிக்கெட் ஆர்வலர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நிறைவுற்றது மன்னார் மாவட்டப் பிறிமியர் லீக் துடுப்பு மட்டைப் போட்டிகள் :

மன்னாரின் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தால் கடந்த பல வாரங்களாக நடாத்தப்பட்டு வந்த மன்னார் பிறிமியர் லீக் துடுப்பு மட்டைப் போட்டிகள் நிறைவெய்தின. சுற்றுப்போட்டிச் சம்பயனாக சென் விக்டர்ஸ் அணி தெரிவானது. 14.09.2012ல் மன்னார் பொது விளையாட்டரங்கில் இறுதிப் போட்டியினை எதிர்கொண்ட இந்து முண்ணனி அணியை சென் விக்டர்ஸ் அணி 4 இலக்குகளால் வெற்றியீட்டியது.

பதினைந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப் போட்டித் தொடரில் இறுதிப்போட்டியில் முதலில் மட்டையாடத் தீர்மானித்த இந்து முண்ணனி அணி இலக்குகளை இலகுவாகக் கோட்டைவிடத் தொடங்கியது. ஆரம்பம் முதலே பலமான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறிய இவ் அணியின் வசந்தனைத் தவிர அனைவரும் ஒற்றை ஓட்ட இலக்கங்களுடன் வீடு திரும்பினர். இறுதியில் 113 ஓட்டங்களை அவ்வணி பெற்றுக்கொண்டது. வசந்தன் 52 ஓட்டங்களைப் பெற்று அணிக்கு வலுவூட்டினார்.

பதிலுக்குத் துடுப்பாடக் களமிறங்கிய சென் விக்டர்ஸ் அணியும் அடுத்தடுத்து இலக்குகளை இழந்து தடுமாற்றம் கண்டது. எனினும் மத்திய வரிசையில் தரித்து நின்ற திலீபன் மற்றும் விவேக் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 14.3 பந்துப் பரிமாற்ற முடிவில் 7 இலக்குகளை மட்டும் இழந்து இவ் அணி வெற்றிக் கோப்பையைச் சுவீகரித்தது.

இப் போட்டியின் சுவையான விடயம் என்னவெனில் இரண்டு ஆறு ஓட்டங்கள் பெறப்பட்ட போது அப் பந்துகளை அரங்கிலிருந்த இருவர் பிடித்ததாகும். பிடியெடுத்த அவர்கள் இருவருக்கும் தலா 500 ரூபாப் பணப்பரிசை சிங்கர் பிளஸ் நிறுவனம் வழங்கி கௌரவித்தது.

## உலகின் மிகப் பெரிய நாய்



உலகின் மிகப்பெரிய நாயாக 2.2 மீற்றர் நீளமான டனிஸ் இன நாயொன்று தன்னைப் பதிந்துள்ளது. நாளொன்றுக்கு 14 கிலோகிராம் உணவை உட்கொள்ளும் இப்பெண்நாய் உலகின் முன்னைய சாதனை நாயான இதே இன நாயை விட ஒரு அங்குலம் அதிகமாய் வளந்துள்ளதால் இப்பட்டத்தைப் பெற்றுள்ளது.

2013ன் உலக சாதனைகளை பதிவுசெய்யும் புத்தகமான கண்ணீஸ் உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரை பதிந்துள்ள இந் நாய் 70.3 கிலோகிராம் எடையுள்ளது. இதன் உரிமையாளரான மூன்றே வயதான சிறுவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. பார்வையாளர்கள் எவருமே இந் நாயை ஓர் நாய் என நம்ப மறுப்பதாகவும் அதனைக் குதிரையென்றே நம்புவதாகவும் உரிமையாளரான சிறுவன் பெருமையுடன் கூறிக்கொண்டார். இந்நாயை கொண்டுசெல்வதற்கு எப்போதுமே பெரிய வாகனமொன்றே தேவைப்படுவதாகக் கூறிய அவன் இந்நாய் தனது கால்களை எம்மை மிதித்தாலே எமக்குக் கண்டல் காயம் ஏற்பட்டுவிடும் எனவும் கூறியுள்ளான்.

## மைதானத்தில் நிர்வாணக்கோளத்தில் ஓடிய நபர்



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நடைபெற்று கால்பந்தாட்ட போட்டியொன்று, மைதானத்தில் நிர்வாணக்கோலத்தில் ஓடிய நபரொருவரினால் தடங்கலுக்குள்ளானது.

ஸ்பைடர் மேன் பாணியில சிவப்பு நிறத்திலான முகமூடியை அந்நபர் அணிந்திருந்தார். அது தவிர வேறு எந்த எதையும் அவர் அணிந்திருக்கவில்லை.

இவ்வாறான சம்பவம் நடைபெறுவது இது முதல் தடவையல்ல. எனினும், இந்நபர் மைதானத்தில் நிர்வாணமாக ஓடித்திரிந்தபின், பாதுகாப்பு அதிகாரிகளிடம் பிடிபடாமல் வேலியை கடந்து ஓடினார். அதன்பின் அங்கு வந்த காரொன்றில் அவர் பாய்ந்து ஏறி தப்பிச் சென்றார்.

## அசத்தினார் அஜந்தா மெண்டிஸ்



20:20 உலகக் கிண்ணத் துடுப்புமட்டைப் போட்டிகளில் சிறந்த பந்து வீச்சுப் பெறுபேற்றை பதிந்துள்ளார் அஜந்த மெண்டிஸ். இலங்கையின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான அஜந்த மெண்டிஸ் சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது போட்டியில் நான்கு பந்துப் பரிமாற்றங்களுக்கு எட்டு ஓட்டங்களைக் கொடுத்து ஆறு இலக்குகளைக் கொய்தார். இந் நான்கு பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு பந்துப் பரிமாற்றங்கள் ஓட்டம் எதனையும் பெறாதவையாகவும் இருந்தன.

இந்தப் பந்து வீச்சுப் பெறுதியே 20:20 உலகக் கிண்ணத்தின் மிகச் சிறந்த பந்துவீச்சுப் பெறுதியாக அமைந்து சாதனையாக பதியப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அஜந்த மெண்டிஸே நான்கு பந்துப் பரிமாற்றங்களுக்கு ஒரு ஓட்டமற்ற பரிமாற்றம் உள்ளடங்களாக பதினாறு ஓட்டங்களைக்கொடுத்து ஆறு இலக்குகளை வீழ்த்திய சாதனையைக் கொண்டிருந்தார். தற்போது ஓட்ட எண்ணிக்கையைக் குறைத்து அச்சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

அடுத்த சிறந்த பந்துவீச்சை பாகிஸ்தானின் உமர் குல் பதிவுசெய்துள்ளார். அவர் 20:20 உலகக் கிண்ணப் போட்டிகளில் மூன்று பந்துப் பரிமாற்றங்களில் ஆறு ஓட்டங்களிற்கு ஐந்து இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

## வான் சாகச வீராங்கனை விழுந்து மரணம்.



வானிலிருந்து தரைக்குப் பாயும் பறப்புச் சாகச வீராங்கனையொருவர் விமானத்திலிருந்து பாய்ந்த போது தனது பறக்கும் உடுப்பின் குடை விரியாததால் நேரே நிலத்தில் விழுந்து சிதறிச் சாவடைந்துள்ளார். சமுர்ா 990 அடி உயரத்தில் பறந்தபோது அவரது பறப்பு உடுப்பின் குடை விரிய மறுத்துவிட்டதால் இவ்வனர்ததம் நிகழ்ந்துள்ளது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த வயோலெட்டா ரோஸ்லன் என்ற இளம் கர்ப்பிணிப் பெண் சாகச வீராங்கனைக்கே இக் கதி ஏற்பட்டுள்ளது. சிதறும்போது இவர் நான்கு மாதக் கர்ப்பிணி ஆக இருந்தது மேலும் கவலையளிக்கின்றது. சுவிஸ்லாந்தின் ஸ்டெசல்பேர்க் பிரதேச வான்பரப்பில் தனது இறுதிப் பாய்வாக இப் பாய்வினை ஏற்கனவே குறித்திருந்த இவ்இளம் வீராங்கனை தனது பத்தொன்பது வயதில் முதலாவது வெற்றிகரமான பாய்வைப் பதிந்திருந்தார். அவ்வயதிலிருந்து தொடர்ந்து வான் சாகஸ வீராங்கனையாக தனது 25 வயதுவரைச் செயற்பட்ட இவர் இப் பாய்வே தனது இறுதிப் பாய்வு என்றும் அதன் பின்னர் தான் இவ் விளையாட்டிலிருந்து பிள்ளைப்பேறு வரை விலகிக்கொள்ளவிருப்பதாகவும் இறுதியாக அளித்திருந்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

அவருடன் சேர்ந்து இந்த அவரது ஆண் துணையான அலெக்ஸாந்தர் டொமாலிவ்ஸ்கியும் விமானத்திலிருந்து குதித்திருந்தார். எனினும் அவரது பறப்பு உடையின் குடை சரியான நேரத்தில் தொழிற்பட்ட படியால் அவர் சேதமின்றி உயிர் பிழைத்திருந்தார். தனது பெண்துணை குடை விரியாமல் நேரே நிலத்தை நோக்கிச் சென்றதை கையைப் பிசைந்துகொண்டு பார்க்க முடிந்ததே தவிர அலெக்ஸாந்தர் டொமாலிவ்ஸ்கியால் வேறு எதுவும் செய்திருக்க முடியவில்லை.

இவரது தாயார் அளித்த பேட்டியின் போது தான் ஒவ்வொரு முறையும் விமானத்திலிருந்து தனது பெண் பாயும்போது பயத்துடனே காலங்கழித்தாகவும் அவளது கடைசிப் பாய்வை நிகழ்த்தவே வேண்டாம் எனக் கெஞ்சிக் கேட்டதாகவும் கூறினார்.

உலகம் முழுவதும் பயணம் செய்துள்ள இந்த இளம் வான்பாய்வுச் சாதனைப் பெண் சுவிஸ்லாந்தின் தொலைக்காட்சியொன்றிற்கு வழங்கிய பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். நான் விமானத்திலிருந்து குதிக்கும் போதே வாழ்வதாக உணர்கின்றேன். சாதாரண வாழ்வானது எனக்கு அலுப்புத்தருவதாகவே உள்ளது. என்னுடன் மரணமும் எப்போதுமே சோந்து பறப்பதும் எனக்குத் தெரியும் ஆனால் மிகக் குறைந்த காலமே இப் பூமியில் வாழ்வதற்காய் உள்ளது. சூரியன் மறைந்த பின் அதனைச் சிந்திப்பவர் யார் உள்ளனர். அவ்வாறுதான் எம்மைப் பற்றியும் யாரும் மரணத்தின் பின் சிந்திப்பதில்லை.




உயர்தரப் பரீட்சைகளின் பின் உலகம்
நோக்கிப் பயணிக்க உங்களுக்குத் தேவையான
ஆங்கில கல்வி நெறி

UNIVERSITY OF CAMBRIDGE
Key English Test (KET)

முழுநேர 3 மாத கல்வி நெறி

செப்டெம்பரில்

Veal Business College



No:159 A,Sea Viwe Road Trincomalee. Tel: 026 2227 622 , 077 7555 738


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி மட்டுமே இவர்களின் மூச்சாய் இருக்கிறது.




தேடல் என்பது எவ்வளவு பாரதூரமானது என்பதுடன் தேடல் மூலமான பெறுதல்கள் எவ்வளவு உண்மைத்தன்மையானவையாக இருக்கும் என்பதையும் சற்று நாட்களுக்கு முன்தான் வீரியமாக உணர முடிந்தது. எல்லாவற்றையுமே வெளிப்படையாக உணர்ந்து மறைமுகமாக பேசும் வாய்களை கடந்து எல்லாவற்றையும் மறைமுகமாய் உணர்ந்து வெளிப்படையாய் பேசும் சில நெஞ்சங்களை சந்தித்திருந்தேன்.

வலிகளையும், நோதல்களையும், காயங்களையும் சுமந்த மண்ணிலே இறந்தகால நிகழ்வுகளை உரமாக்கி தம்மீதான இருட்டடிப்புக்களை மீறத்துடிக்கும் இளைய சமூதாயத்தை பார்த்த மகிழ்வோடு அவர்களிலிருந்தே தி/மூ/ சேனையூர் மத்திய கல்லூரியின் தேசிய மட்ட மெய்வல்லுனர் அணியை அறிமுகம் செய்கிறேன்.

யுத்தத்தின் பின்னர் மீளப்புதுப்பிக்கப்பட்ட சேனையூர் மத்திய கல்லூரி கல்வி, கலை, விளையாட்டு மற்றும் சமூகம் என பல்துறை சாதனையாளர்களை மிகுந்த சிரமங்களின் மத்தியில் உருவாக்கி வருகிறது. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், உறுதுணையாய் நிற்கும் அதிபரினதும் அயரா ஈடுபாடும், முயற்சியும் இங்கு வளங்கள் இல்லையா? என்ற கேள்வியையே ஏற்படுத்துகின்றது. நிலங்களும், வளங்களும் அற்றவர்களாய் நன்மனங்கள் கொண்ட இவர்களின் தேசிய மட்ட விளையாட்டுக்களுக்கு தாயார் நிலையில் உள்ள பெண்கள் மெய்வல்லுனர் அணி 2010 க்கு பின்னர் தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்று வருகிறது.

அதிபர் திரு. இராமலிங்கம் இரத்தினசிங்கம் மற்றும் உடற்கல்வி ஆசிரியை திருமதி பா. ரதிசீலன் ஆகியோருடன் படத்தில் இடமிருந்து வலமாகக் காணப்படும்.

செல்வி. மு. கலைவாணி - 5000m, 4 x 400m ஆகிய போட்டிகளில் உடற் தகுதி பெற்றிருப்பதுடன் ஏலவே இப்போட்டிகளில் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை பெற்றிருக்கிறார்.

செல்வி. த. ஜெகதீஸ்வரி - 800m, 4 x 400m ஆகிய போட்டிகளில் உடற் தகுதி பெற்றிருப்பதுடன் ஏலவே இப்போட்டிகளில் வெள்ளி பதக்கம் பெற்றுள்ளார்.

செல்வி. ஆ. அரசி - 4 x 400m ஆகிய போட்டிகளில் உடற் தகுதி பெற்றிருப்பதுடன் ஏலவே இப்போட்டிகளில் வெள்ளி பதக்கம் பெற்றுள்ளார்.

செல்வி. யோ. இலங்கேஸ்வரி - 1500 m இல் உடற் தகுதி பெற்றிருப்பதுடன் ஏலவே வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

திறமையையும், தகுதியையும் மட்டுமே தம் கைகளில் வைத்துக் கொண்டு இரவு பகலாய் வெற்றிக்குப் பாடுபடும் இவர்கள் பற்றி உடற்கல்வி ஆசிரியை திருமதி பா.ரதிசீலன் என்னிடம் பெருமைப்பட்ட விதம் எழுத்தில் சொல்லி விட முடியாதுதான். மேலும் விளையாட்டுத் துறையில் தம் பிரதேசம் ஏகோபிக்க வேண்டுமென்று வலைப்பந்து, உதைப்பந்து, எல்லே, கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகளில் அணிகளை தயார்நிலையில் வைத்திருப்பதோடு அதிலும் இவ்விளையாட்டுக்களில் ஆண், பெண் இருபால் அணிகளையும் தயார்படுத்தி இருப்பதும் அதிபரதும் ஆசிரியர்களதும் அர்ப்பணிப்பாகத்தான் இருக்கமுடியும்.

சில வளங்களில் மட்டும் தன்னிறைவுள்ள சமுதாயத்தை காணத்துடிக்கும் இவர்களுக்கு முழு வளங்களையும் பெற்றுக் கொடுக்கும் பட்சத்தில் இவர்கள் ஒரு வரலாற்றுப் பக்கத்தை உருவாக்குவார்கள் என்ற செய்தியுடன் விடைபெறுகிறன்.

- செம்பியன் -

# விடுப்பு

மாகாண சபைத் தேர்தலில் பிழை விட்டுள்ளாராம் எண்டு கத்திறாங்கள் சனங்கள். என்ன எண்டு கேட்டா தாங்கள் தெரிவு செய்த வேட்பாளர்களின் நம்பருக்கு மேலே பிழைய போட்டு அனுப்பிப் போட்டாங்களாம். சரியானதுக்கு நேர சரிதானே போடணும், பிழைய போட்டா அது பிழையானதுக்கான அறிகுறி தானே எண்டு இப்ப கேக்கிறாங்க........ அடராமா. இது எதுவா இருக்கும்

கீழிருக்கும் இரு விடைகளில் ஒன்றை தெரிவு செய்க.

1. கண்கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம்
2. முதல் கோணல் முற்றும் கோணல்.

சரியான விடையை தெரிவு செய்யும் அதிஷ்டசாலி யாரா இருந்தாலும் ஆறுதலா அடுத்த மாகாண சபைத் தேர்தல்ல யாரோடையும் கேட்கலாம்.

ஓ! இப்புடியும் நடக்குறதா வேட்பாளர் தெரிவு? (இதுதான் இனி மக்களின் கேள்வி)




## இவ்வாரம் கி.பி. அரவிந்தனின் கவிதைகள்

**சமநிலை**

காற்றும் கடலுமாய்
திசையற்ற வெளி
அலையினில் புரள்கின்றது
ஒரு சிறுபடகு
எதிர்வின்றி இசைவாயும்
சாய்ந்தோடி அலையேறியும்
பயணம்
சாயும் பக்கம் சாய்ந்தபடி
அல்லோல கல்லோலமாய்
பயணிகள் தத்தளிப்பில்

சாவின் வீச்சு அலையில்
சுழித்துவரும் காற்றில்
திடமற்ற மனதில்
ஒரே பக்கமாய்ச் சாயாதீர்கள்
கூவுகிறான் தண்டேல்
சுக்கானைப் பிடித்தபடி

---

**தரிசிப்பு**

ஆளுருவும் இல்லை
வசீகரமும் இல்லை
இருந்தும்
கண்ணாடி முன் நான்

தலைமுடி கலைந்திருந்தால்
சீர் செய்ய
முகம் அழுக்காயிருந்தால்
துடைக்க
அதுமட்டுமல்லாது
என்னுள் நான் உற்றுப்பார்க்க
மனக்கண்ணாடி முன்
எந்நாளும்
கைகுலுக்குவதற்கும்
முதுகு சொறிவதற்கும்
அல்லாமல்
நெருப்பினை மூட்டுவதற்காய்.

## *ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்*

01. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை 4 குவளைகளில் சமமாக இடும்போது ஒரு குவளையில் இருக்கும் நீரின் அளவு யாது?
1. 725ml 2. 375ml 3. 357ml

02. சதுரமுகி ஒன்றின் முகங்களினதும், விளிம்புகளினதும் எண்ணிக்கை முறையே,
1. 6,8 2. 8,12 3. 6,12

03. 2kg சீனியின் விலை 200.00 எனின், 500g சீனியின் விலை யாது?
1. 50.00 2. 100.00 3. 75.00

04. முற்பகல் 1.56 மணிக்குப் புறப்பட இருந்த புகைவண்டி 40 நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டது எனின், புகைவண்டி புறப்பட்ட நேரத்தை நியம நேரத்தில் தருக.
1. 02 : 36 2. 02 : 06 3. 01 : 96

05. ஒரு பையினுள் 6 தேங்காய்கள் வைக்கலாம் எனில், 630 தேங்காய்களை வைக்கத் தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை யாது?
1. 105 2. 15 3. 150

06. புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின், 28 ஆம் திகதி என்ன கிழமை.
1. சனி 2. வியாழன் 3. வெள்ளி

07. 28 என்பதை உரோம இலக்கத்தில் எழுதினால் அமைவது?
1. xxiix 2. xxviii 3. xxxii

08. பின்வரும் எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.
1. 985, 960 2. 980, 965 3. 985, 965

09. குமாரி 5 நிமிடத்தில் 5 பூக்கள் செய்வாள். சாந்தி 10 நிமிடத்தில் 10 பூக்கள் செய்வாள். 20 நிமிடத்தில் இருவரும் செய்த பூக்களின் எண்ணிக்கை யாது?
1. 40 2. 15 3. 30

10. புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் தொகை 187. ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் மாத்திரமே பரீட்சை எழுதலாம் எனில் இம் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு தேவையான வகுப்பறைகள் எத்தனை?
1. 9 2. 10 3. 11

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### ஆலயங்களை பரிசீலிக்க உள்ள அமைச்சர்

அமைச்சர் மேவின் சில்வா இலங்கையில் உள்ள அனைத்து கோயில்களையும் புலனாய்வு செய்யப் போவதாக கூறியுள்ளார். எந்த ஒரு கோயிலிலும் மிருகபலி நிகழ்வதைத் தடுப்பதற்காகவும் அக்கோயில்கள் பொதுமக்கள் வாழ்விற்கு இடையூறு விளைவிக்கின்றதா என்பதை தெரிந்து கொள்வதற்காகவும் இப்புலனாய்வில் ஈடுபடப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் உறவு அமைச்சான (Ministry of Public Relations) தனது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தியே இவற்றைச் செய்யவுள்ளதாக இவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் முன்னேஸ்வரம் கோயிலை அவ்விடத்திலிருந்து அகற்றும் எண்ணம் தனக்கு இல்லை எனவும் கோயிலை அண்டியுள்ள நிலப்பகுதிகள் தவறாக வழங்கப்பட்டதா என்பதை ஆராயப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

### மிகின்லங்காவில் இயந்திரக் கோளாறு

மிகின்லங்கா அண்மையில் குத்தகைக்கு எடுத்திருந்த A 321 ரக விமானத்தின் இயந்திரமொன்று பழுதடைந்துள்ளதால் மற்றொரு விமானத்தின் எந்திரம் இவ்விமானத்திற்குப் பொருத்தப்பட்டு பயணித்ததாக தகவலகள் வெளியாகியுள்ளது.

இதனால் அம்மற்றைய விமானம் பறப்புக்களிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. A321 ரக விமானங்களின் மணித்தியாலக் குத்தகையாக பறப்பு மணித்தியாலம் ஒன்றுக்கு 2,350 அமெரிக்க டொலர்களை மிகின்லங்கா செலுத்திவருகின்றது. தற்போது மிகின் லங்காவிற்கு இரண்டு A321 வகை விமானங்களும் ஒரு A 320 ரக விமானமும் உள்ளன. குத்தகைக்கு எடுக்கப்பட்ட A 321 ரக விமானமானது ஏற்கனவே 9 வருடங்கள் பழையது. இதனைக் குத்தகைக்கு பெற்றுக்கொள்ள முன் மிகின் லங்காவின் இரண்டு விமானிகளில் ஒருவர் முறையே 7 நாட்களையும் மற்றையவர் 20 நாட்களையும் பரீஸ் நகரில் அக்குறித்த விமானத்தைப் பரீட்சிப்பதற்காக கழித்துள்ளனர். அவர்களின் இறுதி முடிவின் பின்னரே அண்மையில் இவ் A321 ரக விமானம் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

### பொதுமக்கள் பார்வையில் துமிந்த சில்வா

இந்த மாத இறுதியில் பாரளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாடு திரும்பவுள்ளார். திரும்பியவுடன் அரசியலில் ஈடுபடவுள்ள அவரின் தலைமையில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவரின் அலுவகத்தில் இருந்து பெயர் குறிப்பிட விரும்பாத அலுவலர் தெரிவித்துள்ளார். முகப் புத்தகத்தின் ஊடாக (Facebook) இலங்கையின் சமூகவலைப்பின்னலில் உள்ள மக்களுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருக்கும் இவர் பாரத லக்ஷ்மன் படுகொலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தலையில் படுகாயம் அடைந்திருந்ததுடன் அக் கொலையின் சூத்திரதாரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டவராகவும் உள்ளார்.

### சுதந்திர சர்வதேச பெறுப்புக்கூறும் ஆணைக்குழு வேண்டும் – ஐக்கிய அமெரிக்கா.

சுதந்திர சர்வதேச பெறுப்புக்கூறும் ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பாக இலங்கையை நிர்ப்பந்திக்கும் வேண்டுகோளை மேற்கொள்ளவேண்டும் எனும் கோரிக்கை கடந்த வாரம் அமெரிக்க அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட முகவர் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கையானது மனிதகுலத்திற்கு எதிரான போரக் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் விசாரிக்கும் பொறுப்பையும் இச் சர்வதேச ஆணைக்குழுவே மேற்கொள்ள வேண்டும் என்று கூறுவதுடன் இலங்கையினால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பொறுப்புக் கூறும் முடிவுகள் போதுமானவையல்ல எனும் குற்றச்சாட்டையும் கொண்டுள்ளது.

### எரிபொருள் இருப்புக்கள் பரீட்சிக்கப்படுகின்றன.

பாவனைக்குதவாத எரிபொருள் என ஒதுக்கப்பட்ட எரிபொருள் இருப்புக்களை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (Industrial Technological Institute) பரிசோதனை செய்யவுள்ளதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். பெற்றோலிய வளத்துறை அமைச்சரால் தம்மிடம் வழங்கப்பட்டுள்ள எரிபொருள் மாதிரிகளில் நுண்ணுயிரியல் கலப்புக்கள் ஏதும் உள்ளனவா என ஆய்வு செய்யப் போவதாக இந் நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கள்ளமாகப் புதைக்கப்பட்டன மருந்துப் பொருட்களும் அழகுசாதனப் பொருட்களும்

பிரபலமான மருந்துப் பொருள் இறக்குமதி நிறுவனத்தின் வளவினுள் பெருந்தொகையான மருந்துகளும் அழகுசாதனங்களும் களவாக புதைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியானது கண்டுபிடித்துத் தடுக்கப்பட்டுள்ளது. மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதியின்றி அழிப்பதற்காக புதைக்கப்பட்ட இம் மருந்துப் பொருட்களை அதிகார சபையின் அலுவலர்கள் கைப்பற்றியுள்ளனர். இவை அழிக்கப்பட வேண்டுமாயின் உண்மையில் எரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எரிப்பதற்கேற்படும் பெரும் செலவை கருத்தில் கொண்டு அந்நிறுவனம் இவற்றைக் கள்ளமாக புதைக்க முயன்றது தெரியவந்தது.

இருப்பது பொய் போவது மெய் என்றெண்ணி நெஞ்சே!
ஒருத்தருக்கும் நீங்கினை உன்னாதே - பருத்ததொத்தி
நம்மதென்று நாமிருப்ப நாய் நரிகள் பேய் கழுகு
நம்மதென்று தாமிருக்கம் தாள்.

-பட்டினத்தார்-

## The Sunday Times:

### 51 இலங்கையர்களை மீட்டது இலங்கைக் கடற்படை.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக தப்பியோடிய 51 இலங்கையர்களை இலங்கையின் கடற்படை கடலின் நடுவே கைது செய்துள்ளது. 300 கடல் மைல்களுக்கப்பால் கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இவர்கள் சுமார் ஏழு நாட்களாக குடிநீருக்கும் உணவுக்கும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியதாக கடற்படை தெரிவித்துள்ளது. ஆரம்ப விசாரணைகளின் போது படகோட்டிகள் படகு பழுதடைந்தவுடன் மற்றொரு படகு எடுத்துவருவதாக கூறி சிறிய படகொன்றில் தப்பிச்சென்றுள்ளனர் அவ்வாறு தப்பிச் சென்றவர்கள் இவ் 51 பேரின் உயிரையும் பணயம் வைத்தே தப்பிச் சென்றுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. அவ் ஓட்டிகள் மீண்டும் இப் பெரிய படகிற்கு வந்து சேராமல் போகவே பயப் பிராந்தியுடன் தாம் காலத்தைக் கழித்ததாக அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

### திமிங்கலங்களையும் டொல்பின்களையும் பார்வையிடுவதற்கு கடும் சட்டங்கள் அமுல்.

இலங்கைக் கடற்பரப்பில் திமிங்கலங்களையும் டொல்பின்களையும் பார்வையிடும் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும், படகோட்டிகளுக்கும், பார்வையிடுபவர்களுக்குமான இறுக்கமான சட்டதிட்டங்கள் அமுலாகியுள்ளன. இதன்படி காலை ஐந்து முப்பதிலிருந்து மாலை ஏழுமணி வரைக்கும் மட்டுமே இவற்றைப் பார்வையிடும் மணித்தியாலங்களாக இருப்பதுடன் திமிங்கலங்களுக்கு 100 மீற்றருக்கு அப்பாலும் ஏனைய முலையூட்டிகளுக்கு 50 மீற்றருக்கு அப்பாலும் படகுகள் நிறுத்தப்பட வேண்டுமென்ற கட்டைளைகள் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிபோதையில் எவரும் படகுகளில் இருக்கக் கூடாது என்பதுடன் குடிவகைகள் எவையும் படகுகளுக்குள் இருக்கக் கூடாது என்பதும் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

## Sunday Observer:

### கரையோரப் பாதுகாப்பில் இலங்கையின் கப்பல்கள்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் சட்டவிரோத பயணிகளைத் தடுக்கும் நோக்குடன் இலங்கையின் கடற்படை தனது கப்பல் தொகுதிகளை பயன்படுத்தவுள்ளது என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு, மேற்கு, தெற்கு கடற் பிரதேசங்களில் இக்கடற்படை கப்பல்கள் பாதுகாப்பில் ஈடுபட இருப்பதாக இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### உருக்கிரும்புக் கொல்கலன் கைப்பற்றப்பட்டது.

கதிர் வீச்சினால் பாதிக்கப்பட்ட உருக்கிரும்புகளை கொண்ட கொள்கலன்களில் ஒன்றை இலங்கையின் அணுவலு ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளார்கள். கோபோல்ட் 60 எனும் அணுக்கதிர் துணிக்கைகளை இவ் உருக்கிரும்பு கொண்டிருப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து இலங்கையின் சுங்க திணைக்களத்திற்கு இக் கொள்கலன்களை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்க்கொள்ளும்வரை பாவனைக்கு அனுமதிக்க வேண்டாம் என இலங்கையின் அணுவலு ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

### இலங்கையின் அபிவிருத்தியை பார்வையிட வெளிநாட்டவர் எவரும் வரலாம்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதற்கு எந்த வெளிநாட்டவரும் இலங்கைக்குள் வருவதற்கு தடையில்லை என அமைச்சர் கெகலியே ரம்புக்வெல தெரிவித்துள்ளார். எனினும் அவ்வாறு வருபவர்கள் அரசாங்கத்திற்கு எவ்விதமான அறிவுறுத்தல்களையும் வழங்கக்கூடாது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். அவ்வாறு நாட்டுக்குள் வருபவர்களுக்கு இலங்கையின் நிலைமை தொடர்பாக தெரியாததால் அவர்களின் ஆலோசனைகள் இலங்கைக்கு வெறுப்பேற்றுபவையாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### போதைமருந்து கடத்தல் மன்னன் கைது

இலங்கையில் போதைமருந்துக் கடத்தலில் 2ம் நிலையில் இருப்பவர் என பட்டியலிடப்பட்ட சந்தேகநபரை காவல்துறை கைது செய்துள்ளது. பலதடவைகள் தப்பிச் சென்றிருந்த இவர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

### 160 000 குழந்தைகளுக்கு கண்பார்வைக் குறைவு

இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி சுமார் 160 000 குழந்தைகள் கண்பார்வைக் குறைபாடுள்ளவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது. இக்குறைபாடுகளில் முக்கியமாக வெண்திரைபடர்தல், குளுக்கோமா ஆகியவையே இனங்காணப்பட்டுள்ளன.


திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்

போன்றவை இடம்பெற வேண்டுமா?



தொடர்புகளுக்கு

அலுவலகம்- 159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218

விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலையில் உருவாகுமா..

மாகாணசபைத் தேர்தலின் பின்னர் தமது வாக்குகளால் பயன் எதுவுமில்லாமற் போய்விட்டதாகக் குற்றஞ்சுமத்தும் மக்களிற் சிலரும், இப்புதிய கட்சியை ஆரம்பிக்க முனைப்புடன் செயற்படும் தனிமனிதர்களிடம் பயன்களைப் பெற்றுக்கொண்ட மக்களிற் சிலருமாக கணிசமான மக்கள் தொகை இக் கட்சிக்கான ஆதரவைத் தரும் உறுதியினை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திருமலை வைத்திய...

மட்டுமே பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கழக அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

திருக்கோணமலை வைத்தியசாலை இயக்குனர் வைத்தியர் குணாளன் அவர்களின் வேண்டுகோளுக்கமைய லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்த இந்நிகழ்வில் திருமலை நகர மற்றும் உவர்மலை சார்பாக Lion B. உதயசங்கர், Lion Dr. சச்சிதானந்தன், Lion. பேன்சேவியர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எஞ்சிக் கிடக்கும் கட்டில்களையும் எதிர்வரும் வாரங்களில் பொருத்தும் முயற்சியில் இளஞ் சிங்கக் கழக உறுப்பினர்கள் ஈடுபடவுள்ளார்கள்.

## விருது வென்ற மூன்று...

மற்றும் ரொணீகா சாமிலியின் நெறியாள்கையில் உருவான 'குருடனும் நொண்டியனும்' எம்.சீ.நஜிமுதீனின் நெறியாள்கையில் உருவான 'சலோமி' மற்றும் நெரஞ்சன் சந்ராதித்யவின் நெறியாள்கையில் உருவான 'பரதனும் சீதையும்' ஆகிய நாடகங்கள் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

## கோணேஸ்வரா...

திருக்கோணமலை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சண்முகநாதன் விஜயநீதன் இவ் உபகரணங்களை வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் பிரதி அதிபர் இ. முருகதாஸ், விளையாட்டு பொறுப்பாசிரியர் சி.சசிக்குமார், விளையாட்டு ஆசிரியர். எஸ். ஸ்ரீபன் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் பீட்ஜோன்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அடிப்படை வசதிகலற்ற...

குடும்பங்களைக் கொண்ட இப்பிரதேச மக்கள் நீர், மின், சுகாதாரம் மற்றும் கல்வி உட்பட குடியிருப்பு வசதிகள் கூட இல்லாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

மீன்பிடித்தலையே தமது வாழ்வாதரமாகக் கொண்ட இவர்கள் அத்தொழிலுக்கும் தேவையான உபகரணங்களின்றி தவித்து வருகின்றனர். பாடசாலைக் கல்விக்காக ஐந்து கிலோமீற்றர் கடந்து நிலாவெளி மற்றும் இறக்கக்கண்டி பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் சலப்பையாற்றுப் பகுதியில் தாம் வசிப்பதற்காக குச்சவெளி பிரதேச சபைக்கு மாதம் 1000 ரூபா பணத்தைச் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நன்றி - முகப்புத்தகம்

## வரட்சி நிவாரணமாய்...

திருத்த மற்றும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொ ள்ள முயலும் செயற்றிட்டமாகும்.

இதற்காக பொருத்தமான பயனாளிகளைப் பட்டியலிடும் பணிகளை திருக்கோணமலை மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசச் செயலகங்களும் மேற்கொண்டு முடித்துள்ளன.

திவிநெகும திட்டத்தின் கீழ் மனைப்பொருளாதார அபிவிருத்தி க்காய் வழங்கப்பட்ட பயிர்க்கன்றுகள் யாவும் வரட்சியால் அழிந்துள்ள நிலையிலுள்ள மக்களே இத்திட்ட த்தின் முக்கிய பயானாளிகளாவர். மேலும் இவர்களுக்கு ஏற்கனவே சில நாட்களுக்கு முன் வழங்கப்பட்ட பழ மரக் கன்றுகளையும் தென்னம்பிள் ளைகளையும் நாட்டமுடியாமல் அல்லலுறும் இம் மக்களுக்கு காசுக்கான வேலைத்திட்டம் செயற்படவுள்ளது. 2,000 ரூபாக் கொடுப்பனவை மொத்தமாக வழங்கவுள்ள இவ் வேலைத்திட்டம் கிழமையொன்றில் 4 நாட்கள் வேலைசெய்யும் வகையாக திட்டமிடப்பட்டுள்ளதுடன் நாளொன்றுக்கு 6 மணித்தியாலம் வேலை செய்யும் தேவைப்பாட்டையும் கொண்டுள்ளது.

விசேட வலுக்கொண்டோர், பெண் தலைமைதாங்கும் குடும்ப த்தினர் ஆகியோருட்பட வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்களுக்கும் முன்னுரிமையை இத்திட்டம் வழங்கவுள்ளது.

## மூதூரில் நடந்தது...

மூதூர் வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அவ் வைத்தியசாலையிலேயே இரத்தவங்கியும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் அரத்த வங்கிளின் இரத்த இருப்பை அதிகரிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் இரத்தான நிகழ்வாக இந் நிகழ்வு அமைந்திருந்தது.

அத்துடன் இரத்தானம் செய்தல் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்ற செய்தியை வெளிப்படுத்தும் முகமாக அமைந்த இவ் இரத்தான நிகழ்வு மூதூரில் ஓர் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. இரத்ததானம் செய்த அனைவருக்கும் அதற்கான பதிவுப் புத்தகங்களும் வழங்கப்பட்டிருந்தன.

## புறநெகும திட்டமிடல்...

பிரிவுகளில் 38 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான திட்டமிடல்கள் 15.09.2012ல் நிகழ்ந்த இக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன. இத்திட்டமிடல் கூட்டத்திற்கு பிரதேசசபையின் தவிசாளர், பிரதேச சபையின் செயலாளர், திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டதுடன் அனைத்து கிராம உத்தியோகத்தர்கள் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம மட்ட அபிவிருத்திச் சங்கத்தினர் போன்ற அனைவரும் கலந்து சிறப்பித்தனர். இங்கு நடைபெற்ற திட்டமிடல்கள் அனைத்தும் ஓர் ஆவணப் புத்தகமாக வெளியிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறானதொரு கூட்டம் கிண்ணியா நகரசபையிலும் 20.090.2012ல் நடைபெற்று முடிந்துள்ளது.

## 29ல் கவியரங்கம்

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் வருகின்ற 29.09.2012 அன்று பௌர்ணமி விழா கவியரங்க நிகழ்வு இடம்பெறுகின்றது.

இனியாவது ஒரு விதி செய்வோம் எனும் தலைப்பில் கவியாற்றுகைகள் இடம்பெறவிருக்கின்றன. இப் பௌர்ணமி விழா நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தால் ஒவ்வொரு பௌர்ணமியிலும் இடம்பெறுகின்றது.

## வறட்சியின் மிகுதியால்...

எல்லையாகவும், மனையாவெளியின் பிரதான வீதியை மறுபக்க எல்லையாகவும் கொண்டது. பெருமளவு துணி துவைக்கும் தொழிலாளர்களின் அட்சயபாத்திரமான இக்குளம் முற்றாக வற்றிப்போய் வெறும் மணற் பாளங்களாகியுள்ளமை திருமலையின் வெப்பநிலை எந்தளவிற்கு உயர்ந்திருந்தது என்பதை வெளிக்காட்டுகின்றது.

தற்போது இக் குளம் விளையாட்டுத்திடலாகப் போயிருப்பதுடன் இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடுவதையும் காண முடிந்தது.

தற்போது பருவமழைத் துளிகள் விரவத் தொடங்கியிருப்பதால் குளத்திற்குத் தண்ணீர் மெதுவாக வரத்தொடங்கியுள்ளது.

## போர்களத்தில் பிரசவம்




பிரிட்டனைச் சேர்ந்த இராணுவ வீராங்கனை ஒருவர் தான் கர்ப்பமுற்றுள்ளதை அறிந்திராத நிலையில் போர்க்கள முன்னரங்கில் குழந்தை பிரசவித்துள்ள சம்பவம் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ெல்மன்ட் பகுதியிலுள்ள பிரிட்டனின் பிரதான படைத்தளத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்படி வீராங்கனை ஆண் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

## குடிநீருக்குப் பணம் செலுத்தும் சலப்பையாற்று மக்கள்

“சல்லி கொடுத்துத்தான் தண்ணி குடிக்கோணும். தண்ணிக்கும் சல்லி இஞ்ச மட்டும் தான்” இவை எல்லாம் வயிற்றுப் பசிக்காக சீவியம் நடத்தும் சலப்பையாறு மக்களின் அவலக் குரல்கள்.

சலப்பையாறு, திருமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேசசபைக் குற்பட்ட ஒரு குக்கிராமமாகும். அங்கு சுமார் 28 குடும்பங்கள் வசிக்கின்றன. மீன்பிடியை தமது பிரதான தொழிலாகச் செய்யும் இவர்கள் குறித்த பகுதிக்கு சொந்தக்காரர்கள் அல்லர். அவர்கள் சிலாபத்தையே பிறப்பிடமாக கொண்டவர்கள். எனினும் தம் சொந்த மண்ணை விட்டு இங்கு வந்திருப்பது சிலாபத்தில் தமக்கு பரிச்சயமான மீன்பிடி தொழிலை செய்வதற்கு வசதி வாய்ப்புகள் கிடைக்கப்பெறாமையாகும். அதனாலேயே வருடத்தின் பெரும் பகுதியை அவர்கள் இங்கு கழிக்கிறார்கள்.

பணம் கொடுத்து குடிநீர் அருந்தும் ஓர் துர்ப்பாக்கிய நிலையில் வாழும் இவர்கள் வலையில் சிக்கும் மீனின் அளவைக் கொண்டு தான் தாம் அன்று நீர் அருந்துவதா? இல்லையா? என்பதைக் கூட தீர்மானிக்கின்றனர். அந்தளவிற்கு அவர்களின் வறுமை நிலை தலைவிரித்தாடுகிறது.

“குறிப்பிட்ட 28 குடும்பங்களும் மலசலம் கழிப்பது அருகில் அமைந்திருக்கும் காட்டில் தான்” என்ற அவர்களின் ஆதங்கம் மனித பிறவியின் ஆரம்பத்திற்கே எம்மை இழுத்துச் செல்வதாக இருக்கிறது. “அ” என்பது உயிர் எழுத்து, அதுவே தமிழின் முதலெழுத்து. இந்த “அ” வைக் கூட எழுதத் தெரியாத பச்சிளம் பிஞ்சுகள் அங்கிருக்கின்றனர். பிள்ளைகளின் கல்விக்கண்ணை திறப்பது யார்? என்பதறியாத பெற்றோர், தாம் விரும்பியோ விரும்பாமலோ பிள்ளைகளையும் மீன்பிடி தொழிலுக்கு இசைவாக்கின்றனர். 10 சதவீத சிறுவர்களே கற்பதற்காக வேண்டி பள்ளிக்கூடம் செல்வதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

“கற்க ஆர்வம் தான், எனினும் 5 கி.மீ தொலைவிலுள்ள பாடசாலைக்கு பஸ்ஸில் செல்ல பணம் இல்லை. மேலதிக வகுப்புகளுக்கு செல்லவும் முடியவில்லை. மின்சாரம் இன்மையால் இரவில் படிப்பதை எம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாது” இது உயர்தரத்தில் கற்கும் மாணவன் ஒருவனின் உள்ளக் குமுறல்கள். இப்படி ஓரிரு மாணவர்கள் தம் தடங்கல்களையும் பொருட்படுத்தாமல் முன்னேறிய சந்தர்ப்பங்களும் உண்டு. எனினும் இந்த நவீன யுகத்தில் இப்படி அல்லலுறும் சிறார்களின் எதிர்காலம் தான் என்ன?.... இவ்விடயம் தொடர்பாகப் பல அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் அவர்களுக்கு இது வரை எந்த வித சலுகைகளோ, நிவாரணங்களோ கிடைத்ததாக இல்லை. ஒவ்வொரு முறையும் இவர்களது கோரிக்கைகள் அதிகாரிகளிடத்தில் மழுங்கடிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாதமும் சரியாக 1000 ரூபா வாடகை பணங்களை அறவிட குச்சவெளி பிரதேசசபை அதிகாரிகள் உரிய நேரத்திற்கே தம் வீட்டுக் கதவின் முன்னால் வந்து நிற்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வாடகை பணங்களை அறவிடும் அரச அதிகாரிகள் இவர்களின் கஸ்டங்கள் குறித்து கவனம் செலுத்தாது இருப்பதன் காரணம் தான் என்ன? இவர்களும் வாழத்தானே வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தியைப்பற்றி கதைக்கும் மஹிந்த அரசாங்கம் ஏன் இன்னும் இவர்களின் கண்களைத் திறக்க முயற்சி எடுக்கவில்லை. மின் குமிழ்களைக் கண்ட கிராமங்களே இன்று அதிவேக நெடுஞ்சாலைகளையும், தேசிய பாடசாலைகளையும் காண்கின்றன. எனினும் இவ்வாரான வறுமையில் வாடும் மக்கள், எப்போது ஓர் மின்குமிழையாவது காண்பது?.......
சலப்பையாற்று மக்களுக்கு விடிவு கிடைக்கும் வரை..............!
விழிப்புடன்................!

எஸ்ஏ.எம்.பவாஸ்

## பாலுறுப்பை சமைத்த இளைஞன்



ஜப்பானிய இளைஞர் ஒருவர், துண்டிக்கப்பட்ட தனது பாலுறுப்பை சமைத்து அதனை உணவகமொன்றின் வாடிக்கையாளருக்கு பறிமாறியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

மயோ சுகியாமா என்ற 23 இளைஞனே இத்தகைய குற்றத்தை புரிந்துள்ளார். இவர் பெண்ணாக மாறுவதற்காக கடந்த மார்ச் மாதம் மருத்துவ சத்திரசிகிச்சையொன்றினூடாக தனது ஆணுறுப்பை அகற்றியுள்ளார்.

அகற்றப்பட்ட உறுப்பை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த அவர், அண்மையில் அதை சமைத்து உணவகத்தின் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறியுள்ளார்.

மேற்படி உணவுக்காக ஒவ்வொரு வாடிக்கையாளரிடமிருந்தும் 160 ஸ்ரேலிங் பவுன்களை அறவிட்டுள்ளதுடன் காளானுடன் கலந்து மேற்படி உணவை பரிமாறியுள்ளார்

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 23. 09. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org